# வாணியம்பாடி நகராட்சி

# 2018-19

## (1) அமைப்பும் நிர்வாகமும்

**நகராட்சி எல்லைகள்:**

இந்நகரமன்றம் 01.04.1886-ஆம் நாள் அமைக்கப்பட்டது. இந்நகராட்சி கோவிந்தபுரம், அம்பூர்பேட்டை, வாணியம்பாடி மற்றும் தேவஸ்தானம் ஆகிய நான்கு கிராமங்களின் பகுதிகளைக் கொண்டதாகும். 09.02.1984ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 184-ற்கிணங்க ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் பஞ்சாயத்து சர்வே எண்கள் 15,24,25 மற்றும் சர்வே எண்கள் 41,42 ஆகியவைகளின் 1978-ஆம் ஆண்டு பாலாற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியமர்த்தப்பட்ட 0.53 ச.கிலோ மீட்டர் நிலத்தை வாணியம்பாடி நகராட்சி கிழக்கு எல்லையுடன் சேர்க்கப்பட்டு எல்லை விரிவு செய்யப்பட்டது. முந்தைய பரப்பளவு 9.00 ச.கிலோமீட்டருடன் தற்போது சேர்க்கப்பட்டுள்ள 0.53 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு சேர்த்து இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.53 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கை ஆண்டில் இந்த எல்லையில் மாறுதல் ஏதும் இல்லை.

**அ. அமைப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பரப்பளவு | : | 9.53 சதுர கிலோ மீட்டர் | | |
| 2. மக்கள் தொகை | : | 1971ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி | : | 51810 |
| | | 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 59107 |
| | | 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 72428 |
| | | 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 85752 |
| | | 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 95426 |
| 3. நகராட்சியின் தகுதி | : | 1. முன்றாம் நிலை நகராட்சியாக 01.04.1866 ம் ஆண்டு தேதி முதல் நகராட்சியாக நிலைப்படுத்தப்பட்டது. | | |
| | | 2. இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது 01.04.1966 அரசாணை எண் 1181 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் : 07.05.1996. | | |

3. முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.22.05.1998அரசாணை (நிலை)) எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் : 22.05.1998.
4. தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.02.12.2008அரசாணை (நிலை))எண்.238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்:02.12.2008.

**அ. நகரமன்ற அலுவலர்கள்:**

**ஆணையர்:**

1) திரு.அ.கோபு, நகராட்சி பொறியாளர் கூடுதலாக ஆணையர் பொறுப்பு 01.04.2018 முதல் 25.04.2018 வரையும் கூடுதலாக ஆணையர் பொறுப்பினை கவனித்து வந்தார். திரு.எஸ்.நாராயணன், அவர்கள் 26.04.2018 முதல் 31.08.2018 வரை ஆணையாளராக இருந்து வந்தார். திரு.பார்த்தசாரதி அவர்கள் 07.09.2018 முதல் 04.01.2019 வரை ஆணையாளராக இருந்து வந்தார். திரு.அ.கோபு, நகராட்சி பொறியாளர் அவர்கள் 05.01.2019 முதல் 15.02.2019 வரை கூடுதலாக ஆணையர் பொறுப்பு கவனித்து வந்தார். திரு.எஸ்.ராஜரத்தினம், துப்புரவு அலுவலர் அவர்கள் 16.02.2019 முதல் அறிக்கை ஆண்டு முடியும் வரை ஆணையாளர் பொறுப்பாக உள்ளார்.

**நகராட்சி பொறியாளர்:**

திரு.அ.கோபு, நகராட்சி பொறியாளராக 01.04.2018 முதல் 31.03.2019 அறிக்கை ஆண்டு முடியும் வரை பணிபுரிந்து வருகிறார்.

**நகர் நல அலுவலர்:**

டாக்டர்.திருமதி.கே.எம்.அஜீதா, நகர்நல அலுவலராக (Municipal Health Officer) 01.04.2018 முதல் 29.08.2018 முதல் பணியாற்றி 30.08.2018 முதல் 10.10.2018 வரை திருவண்ணாமலை நகராட்சியில் Deputation ஆகவும் மீண்டும் இந்நகராட்சியில் 11.10.2018 முதல் 31.03.2019 அறிக்கை ஆண்டு முடியும் வரை பணியாற்றி வருகிறார்.

**நகரமைப்பு அலுவலர்:**

திரு.ஆ.சண்முகம் அவர்கள் நகரமைப்பு அலுவலராக 01.04.2018 முதல் 31.03.2019 வரை அறிக்கை ஆண்டு முடியும்வரை பணிபுரிந்து வருகிறார்.

**மேலாளர்:**

01.04.2018 முதல் 31.01.2019 வரை திரு.எப்.முகமது அஜீஸ்சூதின், மேலாளர் அவர்கள் பணிபுரிந்து வந்தார். 01.02.2019 முதல் அறிக்கை ஆண்டு முடிய மேலாளர் பணியிடம் காலியாக உள்ளது.

## நகர மன்றம்

அரசு ஆணை எண்.135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்:11.06.1996-ந் தேதியின்படி நகராட்சி வார்டுகளை 33-லிருந்து 36-வார்டுகளாக உயர்த்தி ஆணையிடப்பட்டது. மேற்கண்ட 36 வார்டுகளில் அரசு ஆணை எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்), நாள்:07.09.2006-ந் தேதி மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.235, நாள்:07.09.2006-ந் தேதியில் கீழ்கண்ட விவரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.

**மொத்தம் வார்டுகள் : 36**

| | | |
|---|---|---|
| 1. தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது வார்டுகள் | : 8,19,26 | - 3 |
| 2. தாழ்த்தப்பட்ட பிரிவினர் பெண்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் | : 27,36 | - 2 |
| 3. பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பொது வார்டுகள் | : 4,6,9,14,18,25,28, 29,32,35 | - 10 |
| 4. பொது வார்டுகள் | : 1,2,3,5,7,10,11, 12,13,15,16,17,20 21,22,23,24,30, 31,33,34 | - 21 |
| | | ----- |
| | | **36** |
| | | ----- |

அரசு ஆணை எண்.88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (தேர்தல்), நாள்:07.09.2006-ந் தேதி நகர மன்ற தலைவர் பதவி பொது பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னையின் சட்டபூர்வ ஆணை S.O.No.45/2011/TNSEC/ME-1, நாள்:21.09.2011-ந் தேதியின்படி இந்நகராட்சிக்கு 19.10.2011-ந் தேதி உள்ளாட்சித் தேர்தல் நடைப்பெற்றது. இதில் நகரமன்ற தலைவர் மற்றும் 36 நகரமன்ற வார்டுகளுக்கு தேர்தல் நடைப்பெற்றது. வாக்கு

எண்ணிக்கை 21.10.2011-ந் தேதியில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற தலைவர் மற்றும் 36 நகர மன்ற உறுப்பினர்களுக்கும் 25.10.2011-ந் தேதியன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் நகராட்சி ஆணையர் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரி அவர்களால் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களை பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. 25.10.2016-ம் தேதியுடன் நகரமன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவி காலம் முடிவடைந்த காரணத்தால் 26.10.2016 தேதி முதல் தனி அலுவலர் பதவி வகித்து வருகின்றார்கள்.

**<u>நகர மன்றத் துணைத் தலைவர்:</u>**

------

**<u>குழுக்கள்:</u>**

**<u>சொத்துவரி மேல்முறையீட்டுக் குழு:</u>** - உறுப்பினர்கள் இல்லை

**<u>நியமனக் குழு:</u>** - உறுப்பினர்கள் இல்லை

**<u>ஒப்பந்தக் குழு:</u>** - உறுப்பினர்கள் இல்லை

| வ. எண் | குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நியமனக்குழு | - | - |
| 2 | ஒப்பந்தக்குழு | - | - |
| 3 | வரி மேல்முறையீட்டுக்குழு | - | - |
| 4 | உள்ளூர் திட்டக்குழுமம் | - | - |
| 5 | சிறப்புக்கூட்டம் | - | - |
| 6 | அவசரக்கூட்டம் | - | - |
| 7 | சாதாரணக்கூட்டம் | 268 | 268 |

**<u>தகவல் மையம்:</u>**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண் 88411/எம்.சி.ஏ.3 நாள் :29.11.97-ற்கு இணங்க இந்நகராட்சியில் 22.12.1997-ஆம் தேதி முதல் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்தது. தகவல் மையம் ஆரம்பிப்பது தொடர்பாகவும் அதன் செயல்பாடுகள் குறித்தும் பொது மக்களுக்கு விளம்பரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் மையத்தின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கீழ் குறிப்பிட்ட நாட்களுக்கு பதில்கள் அளிக்கப்படும் என விளம்பரம் போர்டு நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பிறப்பு இறப்பு நகல் | : | 7 நாட்கள் |
| 2. பெயர் மாற்றம் | : | 15 நாட்கள் |
| 3. சொத்துவரி விதிப்பது | : | 15 நாட்கள் |
| 4. கட்டிட உரிமையாணை | : | 30 நாட்கள் |
| 5. வியாபார உரிமையாணை | : | 30 நாட்கள் |
| 6. குடிநீர்/ கால்வாய்/ வீட்டுக்கு குடிநீர் வழங்கல் | : | 30 நாட்கள் |

மேற்குறிப்பிட்டபடி வரப்பெறும் விண்ணப்பங்களுக்கு குறிப்பிட்ட நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதியான பதில்கள் அனுப்பி சிறந்த முறையில் நகராட்சி நிர்வாகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தகவல் மையம் பிறகு சேவை மையமாக மாற்றப்பட்டுள்ளது.

**<u>மக்கள் சாசனம்:</u>**

தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) எண் 58 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (பொது 2) நாள் :16.04.1998-ல் வெளியிடப்பட்டது. இதற்கிணங்க சேவை மையம் அமைத்தலுக்கான மக்கள் சாசனம் நகரமன்ற தீர்மானம் எண் 284 நாள் : 28.10.1998ல் நிறைவேற்றப்பட்டு அதன்படி செயல்படுகிறது.

**<u>சாசனத்தின் குறிக்கோள்கள்:</u>**

1. சேவைகளை வரைவாகவும், தரமுடனும் அளித்தல்
2. சேவைகளை வழங்குவதற்கான கால அளவுகளைத் தெளிவாக அளித்தல்
3. நுகர்வோரின் நம்பிக்கையைப் பெறும் வகையில் வெளிப்படையான நிர்வாகத்தை மேம்படுத்துதல்

மேற்படி மக்கள் சாசனத்தில் குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம், சாலைகள், வடிகால்கள், தெருவிளக்குகள் போன்ற இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட கால அளவிற்குள் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக விரிவான விளக்கங்களுடன் இந்த மக்கள் சாசனம் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சேவை மையம் மூலமாக குறித்த காலத்திற்குள் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நிர்வாகம்:**

நிர்வாக செலவு அறிக்கையாண்டில் பணியாளர்கள் சம்பளம் ரூ.205.80 இலட்சம், துப்புரவு பணியாளர்களின் சம்பளம் ரூ.309.40 இலட்சம் அறிக்கையாண்டில் அலுவலகத்திற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகளை அச்சடிக்கவும் வாங்கவும் செலவான தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும்.

**2018-2019-ம் ஆண்டில் தொடர்ந்த சிவில் வழக்குகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. ஆண்டு துவக்கத்தில் நிலுவையிலிருந்து வழக்குகள் | : | 57 |
| 2. அறிக்கையாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | : | 02 |
| 3. மொத்தம் | : | 59 |
| 4. அறிக்கையாண்டில் முடிவு செய்த வழக்குகள் | : | -- |
| 5. அறிக்கையாண்டு இறுதியில் முடிவு பெறாமல் உள்ள வழக்குகள் | : | 59 |

மேற்கண்ட வழக்குகளுக்காக ரூ.82,805/- செலவிடப்பட்டுள்ளது. தொடரப் பட்டுள்ள வழக்குகளில் சேர்ந்துள்ள தொகை விவரம்

| | | |
|---|---|---|
| சொத்துவரி | : | ரூ.66,72,402 |
| குத்தகை தொகை | : | ரூ. -- |
| **மொத்தம்** | : | **ரூ.66,72,402** |

## நிர்வாக அறிக்கை 2018-19
## பொறியியல் பிரிவு

**சாலை பராமரிப்பு :**

**சிப்பந்திகள் (சாலை பராமரிப்பு) :**

பொறியியல் பிரிவில் மூன்றாம் நிலை நகராட்சி ஒரு பொறியாளரும் ஒரு இளநிலைபொறியாளரும் ஒரு பொது பணி ஆய்வரும் சாலைகளை பழுது பார்க்க சாலை பணியாளர் 1 நபர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நகர மன்றத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விவரம் பின்வருமாறு:

| | | 2018-19 |
|---|---|---|
| மொத்த சாலைகளின் எண்ணிக்கை | : | 423 |
| தார் சாலைகளின் நீளம் | : | 55.50 கி.மீ. |
| சிமெண்ட் சாலைகளின் நீளம் | : | 24.10 கி.மீ. |
| மண் சாலைகளின் நீளம் | : | 8.20 கி.மீ. |
| மொத்தம் | : | 87.80 கி.மீ. |

| | | |
|---|---|---|
| 1. சிறு பாலங்களின் எண்ணிக்கை | : | 352 |
| 2. தரைபாலங்களின் எண்ணிக்கை | : | 7 |
| 3. மழைநீர் கால்வாய் | : | |
| Covered Area | : | 28.98.கி.மீ |
| Un Covered Area | : | 29.29.கி.மீ |
| 4. தெருவிளக்கு எண்ணிக்கை | : | 2955 |

**இடைவெளி நிரப்புதல் நிதி திட்டம் 2014-15 :**

இந்நகராட்சிக்கு புதிய நகராட்சி அலுவலகம் கட்டிடம் கட்டும் பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் நக.எண்15622/2014/LA3 நாள் 28.05.2014 ன்படி இடைவெளி நிறப்பும் திட்டம் 2014-15-ஆம் ஆண்டு திட்டத்தில், நிர்வாக அனுமதி பெற்று கீழ்கண்ட பணிக்கு 23.03.2015 பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்து அலுவலக 09.09.2017-ந் தேதியன்று திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | நகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டிடம் கட்டும் பணி | 360.00 | 353.64 |

**கல்விநிதி 2017-18 :**

இந்நகராட்சியில் கல்விநிதி 2017-18 - ம் ஆண்டு திட்டத்தின் கீழ் நகரமன்ற தீர்மானம் எண்.11-ல் நிறைவேற்றப்பட்டு, 20.06.17-ந் தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிவுற்று இறுதிபட்டியல் வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | நேதாஜி நகர் தெற்கு பகுதியில் உள்ள நகராட்சி இந்து தொடக்கப் பள்ளியில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 6.00 | 6.00 |
| 2 | காந்தி நகர் நகராட்சி இந்து தொடக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதை பழுது பார்த்தல் | 2.00 | 2.00 |
| 3 | காந்தி நகர் நகராட்சி இந்து உயர்நிலைப் பள்ளியில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 7.00 | 7.00 |
| 4 | வார்டு எண்.30, நேதாஜி நகர் தெற்கு வார்டு எண்.31, பிலால் மசூதி பின்புறம் மற்றும் ஏபா நகரில் பகிர்மான குழாய் அமைத்தல் பணி | 9.00 | 9.00 |
| | **மொத்தம்** | **24.00** | **24.00** |

**நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-18 :**

இந்நகராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-18 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக செயல் முறை கடித எண்.அ2/1191/2017, நாள்:22.11.2017-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ் கண்ட பணிக்கு 13.12.2017 பணி உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டு இறுதிபட்டியல் வழங்கப்பட்டது. பயனீட்டு சான்று மற்றும் பணிமுடிவு சான்று சமர்பிக்கும் நிலையில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி | 4.00 | 4.00 |
| 2 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி | 4.00 | 4.00 |
| | **மொத்தம்** | **8.00** | **8.00** |

**<u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-18 :</u>**

இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-18 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக செயல் முறை கடித எண்.அ2/705/2017, நாள்:22.11.2017-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ் கண்ட பணிக்கு முடிக்கப்பட்டு இறுதிபட்டியல் வழங்கப்பட்டது. பயனீட்டு சான்று மற்றும் பணிமுடிவு சான்று சமர்பிக்கும் நிலையில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.6 பொன்னியம்மன் கோயில் பின்புறம் சுற்று சுவர் அமைக்கும் பணி | 10.00 | 10.00 |
| 2 | வார்டு எண்.28-ல், போஸ்ட் ஆபீஸ் பின்புறம் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் | 2.00 | 2.00 |
| 3 | 1-வது வார்டு சவுக்கு தோப்பு பகுதியில் பேவர் பிளாக் மற்றும் கால்வாய் அமைத்தல் | 6.00 | 6.00 |
| 4 | 1-வது வார்டு அம்பலால் நகரில் கல்வெர்ட் அமைத்தல் | 1.30 | 1.30 |
| 5 | கோணாமேடு ஆசிரியர் காலனியில் புதிய நியாயவிலை கட்டிடம் கட்டுதல் வார்டு எண்.24 | 8.80 | 8.80 |
| 6 | பி.ஜே.என். சாலை பேவர் பிளாக் அமைத்தல் வார்டு எண்.11 | 3.50 | 3.50 |
| 7 | 5-வது வார்டு சென்னாம்பேட்டையில் | 10.00 | 10.00 |
| 8 | வார்டு எண்.36-ல், மாரியம்மன் கோயில் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 2.50 | 2.50 |
| 9 | வார்டு எண்.30-ல், ஆலங்காயம் ரோட்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 2.50 | 2.50 |
| 10 | வார்டு எண்.22-ல், சேங்கன் தெரு எதிரில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 2.00 | 2.50 |
| 11 | வார்டு எண்.28-ல், போஸ்ட் ஆபீஸ் முதல் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் | 2.50 | 2.00 |
| 12 | வார்டு எண்.35-ல், அண்ணா நகர் விரிவாக்கத்தில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 2.50 | 2.50 |
| | **மொத்தம்** | **53.60** | **53.60** |

**சிறப்பு சாலை திட்டம் 2015-16 :**

இந்நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2015-16-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை-5, அவர்களின் செயல் முறை கடித எண்.8121/2015/இ3, நாள் 27.08.15 -ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 27.11.15 பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகள் முடிவுற்றும் நிலையில் உள்ளது. பகுதி பட்டியியல் வழங்கப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.15 ல் காஜாநகர் முதல் தெரு சலமாபாத் சந்திப்பு வரை மற்றும் சலமாபாத், கபூராபாத் ரோடு, தக்குவா மசூதி கபுராபாத் வரை, வார்டு எண்: 32 ஏபா நகர், வார்டு எண்:29 ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவு கூடம் முதல் அம்மன் கோவில் வரை வார்டு எண்: 29 ஆலாங்காயம் கிராஸ் ரோடு உமர் தெரு, வார்டு எண்:34 அர்பத் திருவள்ளுவர் நகர், வார்டு எண்: 11 கன்னியம்பாடி மெயின் தெரு, ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை அமைத்தல் பணி வார்டு எண்:20&22 ஒன்றிதெரு, தச்சகார மசூதி தெரு, வார்டு எண்:9 அரசமரம் தெரு, வார்டு எண்:22 மலங்கு ரோடு, வார்டு எண்:34 தர்மர் தெரு, வார்டு எண்:33 மாரியம்மன் கோவில் தெரு, வார்டு எண்:27கோணாமேடு முதல் தீயனைப்பு நிலையம் வரை, வார்டு எண்:12 கோட்டை மசூதி தெரு, ஆகிய தெருக்கள் பழுதடைந்துள்ளதை தார்சாலையை புதுப்பித்தல் பணி மற்றும் வார்டு எண்:31 ஈத்கா ரோடு முதல் தெரு, வார்டு எண்:30 இஸ்லாமியா காலேஜ் ரோடு மூன்றாவது குறுக்கு தெரு (ஜீனத் ரோடு), வார்டு எண்:9 கன்னடியர் மடம் தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 250.00 | 198.96 |
| 2. | வார்டு எண்.04ல் பி.எம்.ஓ தெரு மூன்றாவது தெரு கமர் மசூதி வரை, வார்டு எண்.06 ஆஜிகுலாம் தெரு, வார்டு எண்.26 வி.எஸ்.கே. ரோடு வார்டு எண்.22 வாரசந்தை ரோடு பி.எஸ்.என்.எல் வரை, வார்டு எண்.35 முஸ்லீம்பூர் மூங்கில் மண்டி வரை, ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.04ல் பி.எம்.ஓ தெரு மூன்றாவது தெரு பங்களா ரோடு வார்டு எண்.06 பொன்னியம்மன் கோவில் தெரு வார்டு எண்.14 ஷகிராபாத் மஜீத் தெரு வார்டு எண்.16 மட்டகார தெரு தொடக்கப்பள்ளி வரை, வார்டு எண்.17 இக்பால் ரோடு இரயில்வே மேம்பாலம் வரை, வார்டு எண்:24 ஆசிரியர் நகர் முதல் தெரு, வார்டு எண்.28 பெருமாள்பேட்டை சிங் முதல் குறுக்கு தெரு முனிசாமி தெரு, வார்டு எண்:15 பஷீராபாத் 5வது குறுக்கு தெரு மசூதி வரை, வார்டு எண்:08 & 11 கச்சேரி ரோடு பி.ஜே.என். ரோடு ஆகிய தெருக்களுக்கு பழுதடைந்துள்ள தார்சாலை புதுப்பித்தல் பணி மற்றும் வார்டு எண்: 25 நீயுடெல்லி வார்டு எண்:02 பெரியபேட்டை கத்திப் தெரு வார்டு எண்:30 மில்லத் ரோடு E.B பின்புறம் ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 250.00 | 238.16 |

**<u>தூய்மை இந்தியா திட்டம் 2016-17 :</u>**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2016-17-ஆம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்:946/2015/அ3 -ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 26.11.15 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகள் முடிக்கப்பட்டு இறுதிபட்டியல் வழங்கப்பட்டது. பயனீட்டு சான்று மற்றும் பணிமுடிவு சான்று சமர்பிக்கும் நிலையில் உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | தள்ளு வண்டி 65 எண்ணிக்கை (Push carts) | 13.00 | 8.44 |
| 2 | 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட பின்கள் 71 எண்ணிக்கை (Bins) | 28.40 | 19.17 |
| 3 | இந்நகராட்சிக்கு ஐந்து எண்கள் 4 சக்கர ஆட்டோ Light Commercial Vehicle வாகனங்கள் வாங்குதல். | 37.50 | 31.25 |
| 4 | காம்பேக்டர் லாரி (Compactor lorry) வாங்குதல். | 27.00 | 27.00 |
| 5 | டிப்பர் லாரி (Tipper lorry) வாங்குதல். | 16.00 | 15.59 |
| | **மொத்தம்** | **121.90** | **101.45** |

**<u>நகர் புற சுகாதார மையம் திட்டம் 2015-16 :</u>**

இந்நகராட்சிக்கு நகர்புற சுகாதார மையம் நிதியின் கீழ் ஏற்கனவே உள்ள நகர்புற சுகாதார மையம் புதிய கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ள செலவின தொகை ரூ.50.00 லட்சமும் மற்றும் புதியதாக நகர்புற சுகாதார மையம் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து உடனடியாக அனுப்பிவைக்குமாறு துணை இயக்குநர் பொது சுகாதர அலுவகம், திருப்பத்துார் அவர்களிடமிருந்து கடிதம் ந.க.எண்:0579/பி3/2015/ நாள்:17.06.2015 வரபெற்ற நிர்வாக அனுமதியை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 26.08.2016 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | நியுடவுன் பகுதியில் நகர்புற சுகாதார மையம் புதிய கட்டிடம் கட்டும் பணி | 50.00 | 50.00 |

**நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2016-17**

தமிழ் நாடு நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2016-17 ஆம் ஆண்டு நிதியின் கீழ் சாலை திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்:8121/2015/இ2 நாள்: 27.08.2015 மற்றும் கீழ் காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 26.12.2016 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகள் முடிவுற்றும் நிலையில் உள்ளது. பகுதி பட்டியியல் வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சம்) | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1,2,3,6,7,8,10,11,13,14,16–ல் உள்ள வி.எஸ்.வி ரோடு, சாந்தாமியான் தெரு, எம்.எல் தெரு, சி.கோவிந்தராஜன் தெரு, காமராஜபுரம், திருவள்ளுவர் தெரு,மண்டி தெரு, முனி குறுக்கு தெரு, ஷாகிராபத் மசூதி எதிரில் கே.கே. குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாயுடன் தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.4,5,8,10,15–ல் உள்ள பி.எம்.ஒ. தெரு, ஆஜிகுலாம் தெரு, ஐயப்பன் கோவில் தெரு, மிட்டாதார் மீர்தீன் தெரு, காஜாநகர் 1 மற்றும் 2 வது குறுக்கு தெரு, கே.கே. தெரு 6வது மற்றும் 7வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 200.00 | 136.01 |
| 2 | வார்டுஎண்.15,16,17,18,20,21,22,25,26–ல் உள்ள குண்டு இப்ராகிம் தெரு, பத்திமா பள்ளி எதிரில் காஜாநகர் பிரதான சாலை, முஸ்லீம்பூர் பூஸ்டர் அருகில் அபுபக்கர் தெரு, ஒன்ஹ்ரி தெரு, பெங்களூர் இப்ராகிம் தெரு, மலங்கு ரோடு, ஜமாத் ரோடு, நீயூடெல்லி, கோணாமேடு ஒனி தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாயுடன் தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.17,18,19,24,26–ல் உள்ள தக்கடி தெரு, பிள்ளையார் கோவில்தெரு, கோவிந்தாபுரம், மாயபிள்ளையார் கோவில் தெரு, கோணாமேடு சமுதமாய கூடம் ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 200.00 | 155.56 |
| 3 | வார்டு எண்.29,31.32.33.35 ல் உள்ள நேதாஜி நகர் வடக்கு பள்ளி சாலை, ஜீவா நகர் மெயின் ஊட்டி நகர் ரோடு, ஏபா நகர் மெயின் ரோடு, ஷேஷகிரி ரோடு, பிள்ளையார் கோவில் தெரு மற்றும் மாரியம்மன் கோவில் தெரு, சங்கம் திரையரங்கம் ஆகிய தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாயுடன் தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.27,28,30,31,34,36 கோணாமேடு பி.எஸ்.என்.எல் எதிரில் ஆடுவதை செய்யும் சாலை, பெருமாள்பேட்டை சிங் தெரு, நேதாஜி நகர் மில்லத் மசூதி தெரு, ஐ.டி.ஐ. ரோடு, பைபாஸ் தர்ஜிபேட்டை குறுக்கு தெரு, திருமாஞ்சோலை ரோடு, ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 200.00 | 76.46 |

**நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2017-18**

தமிழ் நாடு நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2017-18 ஆம் ஆண்டு நிதியின் கீழ் சாலை திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்:21422/2017/இ3 நாள்: 03.10.2017 மற்றும் கீழ் காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரபெற்று

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 07.02.18 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகள் முடிவுற்றும் நிலையில் உள்ளது. பகுதி பட்டியியல் வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சம்) | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1,2,3,6,7,8,10,11,13,14,16–ல் உள்ள வி.எஸ்.வி ரோடு, சாந்தாமியான் தெரு, எம்.எல் தெரு, சி.கோவிந்தராஜன் தெரு, காமராஜபுரம், திருவள்ளுவர் தெரு,மண்டி தெரு, முனி குறுக்கு தெரு, ஷாகிராபத் மசூதி எதிரில் கே.கே. குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாயுடன் தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.4,5,8,10,15–ல் உள்ள பி.எம்.ஒ. தெரு, ஆஜிகுலாம் தெரு, ஐயப்பன் கோவில் தெரு, மிட்டாதார் மீர்தீன் தெரு, காஜாநகர் 1 மற்றும் 2 வது குறுக்கு தெரு, கே.கே. தெரு 6வது மற்றும் 7வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 200.00 | 71.00 |
| 2 | வார்டுஎண்.15,16,17,18,20,21,22,25,26–ல் உள்ள குண்டு இப்ராகிம் தெரு, பத்திமா பள்ளி எதிரில் காஜாநகர் பிரதான சாலை, முஸ்லீம்பூர் பூஸ்டர் அருகில் அபுபக்கர் தெரு, ஒன்ஞி தெரு, பெங்களூர் இப்ராகிம் தெரு, மலங்கு ரோடு, ஜமாத் ரோடு, நீயூடெல்லி, கோணாமேடு ஒனி தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாயுடன் தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.17,18,19,24,26–ல் உள்ள தக்கடி தெரு, பிள்ளையார் கோவில்தெரு, கோவிந்தாபுரம், மாயபிள்ளையார் கோவில் தெரு, கோணாமேடு சமுதமாய கூடம் ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 100.00 | 90.00 |

**<u>நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2018-19</u>**

தமிழ் நாடு நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி சாலை திட்டம் (TURIP) 2017-18 ஆம் ஆண்டு நிதியின் கீழ் சாலை திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்:12981/2018/இ3 நாள்:24.07.2018 மற்றும் கீழ் காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 30.11.18 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகள் நடைபெற்று வருகிறது.

| **வ. எண்** | **பணி விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.3 மற்றும் 4 அப்துல் வஹாப் தெரு, வார்டு எண்.14 ஷாகிராபாத் மெயின் தெரு, வார்டு எண்.29 நேதாஜி நகர் வடக்கு, வார்டு எண்.15 கபூராபாத் 1, 2 மற்றும் 3–வது குறுக்கு தெரு, வார்டு எண்.22 கூஜா காம்ப்ளக்ஸ், வார்டு எண்.28 பெருமாள்பேட்டை தபால் நிலையம் பின்புரம் ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.12 ஹாஜி தெரு, வார்டு எண்.13 மலையாளம் தெரு, வார்டு எண்.24 ஆசிரியர் நகர் ஆகிய தெருக்கள் பழுதடைந்துள்ளதை தார் சாலையை புதுப்பித்தல் பணி மற்றும் வார்டு எண்.29 நேதாஜி நகர் வடக்கு, வார்டு எண்.28 பெருமாள்பேட்டை தபால் நிலையம் பின்புரம், ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைக்கும் பணி. | 200.00 |

| | | |
|---|---|---|
| 2 | வார்டு எண்.29 காளியம்மன் கோயில் 1 மற்றும் 2 குறுக்கு தெரு, வார்டு எண்.29 மருத்துவர் காலனி, வார்டு எண்.30 நேதாஜி நகர் (தெற்கு) மசுதி அருகில், வார்டு எண்.34 தர்ஜிபேட்டை, எண்.33 டி.வி.ஜி. நகர் புதிய தெரு (பேராசிரியர் காலனி), வார்டு எண்.33 சமத் காம்பவுண்டு, ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.31 ஜீவா நகர், வார்டு எண்.33 டி.வி.ஜி. நகர் 1–வது குறுக்கு தெரு, வார்டு எண்.35 புதூர் ஆகிய தெருக்களுக்கு பழுதடைந்துள்ளதை தார் சாலையை புதுப்பித்தல் பணி, வார்டு எண்.30 நேதாஜி நகர் (தெற்கு) மசுதி அருகில், வார்டு எண்.33 டி.வி.ஜி நகர் புதிய தெரு, வார்டு எண்.33 டி.வி.ஜி நகர் 1–வது குறுக்கு தெரு, வார்டு எண்.33 சமத் காம்பவுண்டு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைக்கும் பணி. | 200.00 |
| 3 | வார்டு எண்.5 இந்திராணி நகர், வார்டு எண்.12 கத்திப் தெரு, வார்டு எண்.13 அல்ஹுதா காம்ப்ளக்ஸ், வார்டு எண்.14 ஷாக்கிராபாத் 2–வது குறுக்கு தெரு, வார்டு எண்.28 பெருமாள்பேட்டை 2–வது குறுக்கு தெரு, வார்டு எண்.29 அஷ்டலட்சுமி கோயில் தெரு, வார்டு எண்.30 நேதாஜி நகர் (தெற்கு) ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.5 இந்திராணி நகர், வார்டு எண்.14 ஷாக்கிராபாத் 2–வது குறுக்கு தெரு, வார்டு எண்.29 அஷ்டலட்சுமி கோயில் தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைக்கும் பணி. | 100.00 |

**<u>தூய்மை இந்தியா திட்டம் 2015-16 :</u>**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2016-17-ஆம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்:30355/பி3/2016, நாள்:10.01.2018-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 27.02.18 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் பின்புறம், புதூர் (வார்டு எண்.36, பிளாக்.27) நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 21.12 |
| 2 | இராமையன் தோப்பு (வார்டு எண்.15, பிளாக்.18) நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 22.07 |
| 3 | சென்னாம்பேட்டை (வார்டு எண்.5, பிளாக்.7) நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 50.00 |
| 4 | கோணாமேடு சுடுகாடு பின்புறம் (வார்டு எண்.27) நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 0.00 |
| 5 | ஆலங்காயம் ரோடு, வேப்பமர சாலையில் நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 50.00 |
| 6 | வளையாம்பட்டு சாலை சர்வே எண்.75/பி-யில் நுண்ணுயிரி உரமாக்கல் பணி | 50.00 | 50.00 |
| | **மொத்தம்** | **300.00** | **193.19** |

**தூய்மை இந்தியா திட்டம் 2018-19 :**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2018-19-ம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்.22866/பி3/2018, நாள்:23.08.2018-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 31.10.18 பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று முடிவுற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு திடகழிவு மேலாண்மை பணிக்கு முதன்மை சேகரிப்பு பணிகளுக்கு பேட்டரி மூலம் இயங்கும் மோட்டார் வாகனம் (BOV) சப்ளை செய்தல். | 21.60 | 0.00 |
| | **மொத்தம்** | **21.60** | **0.00** |

**தூய்மை இந்தியா திட்டம் 2018-19 :**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்:30355/பி3/2016, நாள்:24.07.2018-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 04.10.18 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் ஏற்கனவே உள்ள வளையாம்பாட்டு உரக்கிடங்கில் கசடு கழிவு அகற்றும் (Bio Mining) பணிகள்செய்தல். | 207.60 | 0.00 |
| | **மொத்தம்** | **207.60** | **0.00** |

**தூய்மை இந்தியா திட்டம் 2018-19 :**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்:1191/பி3/2019, நாள்:21.01.2019-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு, பணி

உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகள் நடைபெற்று வருகிறது.(வரிசை எண்.3-ல் உள்ள பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | Battery Operated Vehicle-26 Nos | 46.80 | 0.00 |
| 2 | Light Commercial Vehicle -2 Nos | 11.20 | 0.00 |
| 3 | Excavator Backhoe Loader(3 DX) | 28.50 | 0.00 |
| 4 | Mini Excavator | 23.00 | 0.00 |
| 5 | Resource Recover Centre-1 (RRC) வளையாம்பட்டு உரக்கிடங்கு | 18.00 | 0.00 |
| | **மொத்தம்** | **127.50** | **0.00** |

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 :**

இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக செயல் முறை கடித எண்.அ2/1630/2018 நாள்:31.07.2018-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ் கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. முடிவுற்ற பணிளுக்கு மட்டும் பயனீட்டு சான்று மற்றும் பணிமுடிவு சான்று சமர்பிக்கும் நிலையில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.35-ல் அண்ணா நகர் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 2.50 | 2.50 |
| 2 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.9-ல் சீதாராமன் மற்றும் சௌதிரி பொன்னப்பன் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் அரசமர தெருவில் கல்வெட்டு மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 5.00 | 0.00 |
| 3 | வாணியம்பாடி நகராட்சியல் வார்டு எண்.29, புதிய நியாயவிலை கட்டிடம் கட்டுதல் பணி. | 8.80 | 8.80 |
| 4 | வாணியம்பாடி நகராட்சியல் வார்டு எண்.35, வேப்பம்பட்டு சாலையில் புதிய நியாயவிலை கட்டிடம் கட்டுதல் பணி. | 8.80 | 0.00 |
| 5 | வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.32–ல் உள்ள (காந்தி நகர்) உருது உயர்நிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறை கட்டுதல் | 25.00 | 0.00 |
| 6 | வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.1-ல் ஸ்ரீ நகரில் VSV ரோடு அருகில் பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 1.30 | 0.00 |
| 7 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.1-ல் மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல். | 2.00 | 0.00 |
| 8 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.1-ல் விஜயராகவன் குறுக்கு தெருவில் கழிவுநீர் | 6.50 | 6.50 |

| | | | |
|---|---|---|---|
| | கால்வாய், கல்வெட்டு மற்றும் பேவர் பிளாக் அமைத்தல். | | |
| 9 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.1-ல் பச்சை அம்மன் கோயில் அருகில் கல்வெட்டு அமைத்தல். | 1.00 | 0.00 |
| 10 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.1-ல் VSV சாலை பம்ப் ரூம் அருகில் கழிவுநீர் கால்வாய் அமைத்தல். | 6.00 | 0.00 |
| 11 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.3-ல் மஜீத் அருகில் கழிவுநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல். | 6.00 | 6.00 |
| 12 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.21-ல் ஜின்னா ரோட்டில் சென்டர்மீடியன் அமைத்தல். | 8.00 | 8.00 |
| 13 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.31-ல் ஜீவா நகரில் பேவர் பிளாக் அமைத்தல். | 5.00 | 5.00 |
| 14 | வாணியம்பாடி நகராட்சி, வார்டு எண்.8 காமராஜபுரத்தில் கல்வெட்டு, பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 4.00 | 0.00 |
| | **மொத்தம்** | **89.90** | **36.80** |

**<u>பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 :</u>**

இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக செயல் முறை கடித எண்.அ2/969/2018, நாள்:09.10.2018-ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ் கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி இந்நகராட்சியின் வார்டு எண்.1-ல் பிள்ளையார் கோயில் அருகில் காளியம்மன் கோயல் தெருவில் எல்இடி கொண்ட உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல். | 4.50 | 0.00 |
| 2 | வாணியம்பாடி இந்நகராட்சியின் வார்டு எண்.20-ல் பழைய மசூதி எதிரில், பழைய மசூதி தெருவில் எல்இடி கொண்ட உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல். | 4.50 | 0.00 |
| | **மொத்தம்** | **9.00** | **0.00** |

**<u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் 2016-17 :</u>**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2016-17-ஆம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக

மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்: 472017/பிஜி2, நாள்:17.04.2017.-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 31.05.18 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | புதூர் நகராட்சி இந்து ஆரம்ப பள்ளியில் இருப்பு அறையுடன் சமையல் அறை கட்டும் பணி | 2.50 | 2.50 |
| 2 | பெருமாள்பேட்டை நகராட்சி இந்து நடுநிலைப் பள்ளியில் இருப்பு அறையுடன் சமையல் அறை கட்டும் பணி | 3.00 | 3.00 |
| 3 | நேதாஜி நகர் வடக்கு பகுதியில் நகராட்சி இந்து நடுநிலைப் பள்ளியில் இருப்பு அறையுடன் சமையல் அறை கட்டும் பணி | 3.00 | 0.00 |
| | **மொத்தம்** | **8.50** | **5.50** |

**<u>14-வது மத்திய நிதிக்கு திட்டம் 2017-18 :</u>**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், மாநில நிதி மற்றும் பொது நிதி 2017-18-ஆம் ஆண்டு நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் எண்: ந.க.எண்:14989/பி1/2016-2, நாள்:22.08.2017-ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறபட்டு 02.02.18 பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.27 கோணாமேடு BSNL Office அருகில் மழைநீர் கால்வாய் உடன் சிறு பாலம் அமைக்கும் பணி | 10.00 | 0.00 |
| 2 | வார்டு எண்.22 சேங்கன் தெருவில் மழைநீர் கால்வாய் உடன் சிறு பாலம் அமைக்கும் பணி | 9.00 | 6.67 |
| 3 | வார்டு எண்.15 கபூராபாத் மழைநீர் கால்வாய் உடன் சிறு பாலம் அமைக்கும் பணி | 9.00 | 9.00 |
| 4 | வார்டு எண்.23 கச்சேரி ரோடு முதல் வாரசந்தை வரை தார் சாலை சீர் அமைக்கும் பணி | 10.00 | 10.00 |
| 5 | வார்டு எண்.22 வாரசந்தை முதல் காதர் பேட்டை வரை தார் சாலை சீர் அமைக்கும் பணி | 10.00 | 10.00 |
| 6 | வார்டு எண்.13 ஜனதாமேடு இமாஸ்ட் முதல் கச்சேரி ரோடு வரை புதிய தார் சாலை அமைக்கும் பணி | 10.00 | 10.00 |
| 7 | வார்டு எண்.13 ஜனதாமேடு இமாஸ்ட் முதல் பட்டேல் யாகூப் தெரு வரை புதிய தார் சாலை அமைக்கும் பணி | 10.00 | 10.00 |
| | **மொத்தம்** | **68.00** | **55.67** |

**<u>கோடைகால தண்ணீர் தட்டுபாடு நிவர்த்தி நிதி 2017-18</u>**

கோடைகால தண்ணீர் தட்டுபாடு நிவர்த்தி நிதி 2017-18 ஆம் ஆண்டின் நிதியில் கீழ் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்:61/2017/E2 நாள்: 31.01.17-ல் கீழ் காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரபெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கும் நிலையில் உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | தலைமை நீரேற்றும் நிலையம் இராமையன்தோப்பு பாலாற்று பகுதியில் புதிய கேபிள் மற்றும் பைப்லைன் மற்றும் ஆழ்துளை பழுது பார்த்தல் மோட்டார் சரி பார்த்தல். | 7.90 | 7.90 |
| 2 | தலைமை நீரேற்றும் நிலையம் இராமையன்தோப்பு கொடையாஞ்சி திறந்தவெளி கிணறுடன் மோட்டார் மற்றும் பேனல்போர்டு அமைத்தல் | 2.10 | 2.10 |
| 3 | வார்டு எண்.31, ஜீவா நகர் புதிய ஆழ்துளை கிணற்றுடன் சிறுமின்விசை பம்பு அமைக்கும் பணி | 2.00 | 2.00 |
| 4 | கொடையாஞ்சி தலைமை நீரேற்றும் நிலையம் 2 எண்கள் 250 ஆம்ஸ் பேனல்போர்டு மற்றும் 250 ஆம்ஸ் சுட்ச் பாக்ஸ் மற்றும் 90 எம்.எம் கேபிள் அமைத்தல். | 3.00 | 3.00 |
| | **மொத்தம்** | **15.00** | **15.00** |

மின் பணியாளர் : 4

பிட்டர் : 2

குழாய் ஆய்வர் : 1

காவலாளிகள் : 3

வால்வு திருப்புநர் : 2

சாலை பணியாளர் : 1

**<u>மின் விளக்குகள் :</u>**

அறிக்கையாண்டில் 2955 தெரு விளக்குகள் உள்ளன. சென்ற ஆண்டில் பராமரிக்கப்பட்ட தெருவிளக்குகளின் எண்ணிக்கை 2892 ஆகும். அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகள் விவரம் :

| வ.எண் | மின் விளக்குகள் பற்றிய விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 அடி குழல் விளக்குகள் | 2641 |
| 2 | பாதரச ஆவி விளக்குகள் 150W | - |
| 3 | சோடியம் விளக்கு 250 W | 295 |
| 4 | சோடியம் விளக்கு 150 W | 6 |
| 5 | சோடியம் விளக்கு 70 W | 43 |
| 6 | உயர் கோபுர விளக்கு | 28 |
| 7 | T.5 லேம்ப் | - |
| | மொத்தம் | **3013** |

## பொது நலம்

இந்நகரமன்றம் இரண்டு பயிற்சி பெற்ற தாய் சேய் நல உதவியாளர்கள் ஆகியவர்களைக்கொண்டு தாய் சேய் நல மையங்களில் பிரசவம் பார்ப்பதுடன் மையத்திற்கு வர இயலாதவர்களுக்கும் வீட்டில் பிரசவ பணிகள் மட்டும் பார்க்கப்பட்டு வருகிறது.

இது தவிர அரசாணை எண்.103, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (EAP-11 (2) துறை, நாள்:15.04.2010-ன் அரசாணையில், தேசிய ஊரக நல திட்டத்தின் கீழ் ஒரு 60-நகராட்சிகளில் நகர்நல மையங்களை தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.10946/2008/எச்3, நாள் :16.06.2010-ன் கடிதத்தில் நகர்நல மையங்களை செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட மருத்துவ அலுவலர், மருந்தாளர், லேப்டெக்னீஷியன், ஏ.என்.எம் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஆகிய பணியிடங்களை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளதின் பேரில், இந்நகராட்சியில் மருத்துவ அலுவலர், மருந்தாளர், லேப்டெக்னிஷீயன் மற்றும் மருந்தாளர் ஆகிய பணியிடங்களில் தமிழ்நாடு நகராட்சி மருத்துவபணி விதிகள் 1970-ன்படி தொகுப்பூதிய அடிப்படையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசுத் துறையில் பராமரிக்கப்பட்டுவரும் அரசு பொது மருத்துவமனையில் காலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோயாளிகளை சிகிச்சை செய்யும்பொருட்டு 6-படுக்கை வசதியுள்ள அறையை இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**நோயாளிகள் :**

நகராட்சியால் மருத்துவமனை ஏதும் பராமரிக்கப்படவில்லை. அரசு பொது மருத்துவமனை தற்போது விஸ்தரிக்கப்பட்டு உள் மற்றும் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி மூலமாக ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

**<u>இடவசதி தளவாடங்கள் :</u>**

இந்நகரில் பொது சுகாதார பணிக்கு கீழே குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் அறிக்கையாண்டில் பணியாற்றினார்கள்.

| | | |
|---|---|---|
| 1. நகர் நல அலவலர் | : | 1 |
| 2. துப்புரவு ஆய்வர் | : | 2 |
| 3. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | : | 8 |
| 4. களப்பணி உதவியாளர் | : | 0/2011-லிருந்து காலிப்பணியிடம் |
| 5. மகப்பேறு உதவியாளர்கள் | : | 3 (1 காலிப்பணியிடம்) |
| 6. லாரி ஒட்டுநர் | : | 1 |
| 7. மினி லாரி ஓட்டுநர் | : | 2 |
| 8. டிராக்டர் மற்றும் டிரைலர் ஒட்டுநர் | : | -- |
| 9. ஜீப் ஒட்டுநர் | : | 1 |
| 10. துலக்குநர் | : | 1 (17.10.09 காலியிடம்) |
| 11. மகப்பேறு ஆயா | : | 3 (3-பணியிடம் காலியாக உள்ளது) |
| 12. பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள் | : | 80 |
| 13. கால்வாய் துப்புரவு பணியாளர்கள் | : | 20 |
| 14. யானைக்கால் நோய் தடுப்பு பணியாளர்கள் | : | 6 |
| 15. டிராக்டர் பணியாளர்கள் | : | 4 |
| 16. கலவை உர கிடங்கு பணியாளர்கள் | : | 4 |
| | | 136 |

**17.**தனியார் ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் : 85

**<u>பொது சுகாதாரம்:</u>**

ஆடு மற்றும் மாடு வதை செய்யும் தொட்டிகள் இரண்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. வதை செய்யப்படும் ஆடு மற்றும் மாடுகளை அரசு கால்நடை மருத்துவர் அவர்களால் பரிசோதிக்கப்பட்டு சுகாதாரத்துடன் உள்ள கால்நடைகள் மட்டும் வதை செய்யப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு சராசரி 51 ஆடுகள் 32 மாடுகளும் வதை செய்யப்பட்டு வருகின்றது.

பொது நல பிரிவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு அறிக்கையாண்டில் செலவழித்த மொத்த தொகை ரூ.589.62 இலட்சம் ஆகும்.

**விளம்பரம் :**

துப்புரவு ஆய்வாளர்கள் மேற்பார்வையில் காலரா தடுப்பு சம்மந்தப்பட்ட விளம்பர அறிக்கைகள் மற்றும் காசநோய், தொழுநோய், டெட்டனஸ், போலியோ, டிப்தீரியா மற்றும் எய்ட்ஸ் பாதுகாப்பு போன்ற நோய்கள் தடுப்பு பிரசாரத்திற்கு விளம்பரங்கள் நகரிலுள்ள எல்லா பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டது. சினிமா கொட்டகைகளில் சிலைடு மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு பொது சுகாதாரம், ஓட்டல், தேநீர் விடுதி, தங்கும் விடுதிகள் மற்றும் அபாயம் மற்றும் அறுவறுக்கத்தக்க தொழில்கள் நடைபெறும் இடங்கள் அனைத்தும் அவ்வப்போது பார்வையிட்டு சுகாதாரம் நல்ல முறையில் இருக்க ஆணையிடப்பட்டது. நாடு தழுவிய குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் நோய் தடுப்புத் திட்டம் நல்ல முறையில் இந்நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பிறப்பு, இறப்பு மற்றும் மகப்பேறு :**

அறிக்கையாண்டில் நகர எல்லைக்குள் வசிப்பவர்களின் குழந்தைகளின் பிறப்புகள் பதிவாகியுள்ளது. சென்ற ஆண்டில் 2098-ஆகும் அறிக்கை ஆண்டில் இறப்பு 748 ஆகும்.

அறிக்கையாண்டு மத்தியில் கணக்கிடப்பட்ட மக்கள் தொகையின்படி

| | | |
|---|---|---|
| பிறப்பு விகிதம் | : | 13.0% |
| இறப்பு விகிதம் | : | 1.80% |
| சென்ற ஆண்டின் பிறப்பு விகிதம் | : | 13.40% |
| இறப்பு விகிதம் | : | 2.60% |
| மகப்பேரின் போது இறப்பு | : | 0% |
| இதன் விகிதம் | : | -- |

**இறப்பு பற்றிய விவரங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. காலரா | : | இல்லை |
| 2. ஏ.டி.டி. | : | இல்லை |
| 3. பெரியம்மை | : | இல்லை |
| 4. வயது முதிர்வு | : | 265 |
| 5. பிளேக் | : | இல்லை |
| 6. சீதபேதி | : | இல்லை |
| 7. மூளை சம்மந்தப்பட்டவை | : | --- |
| 8. இன்புளுயன்ஸா | : | இல்லை |
| 9. வெறிநாய்கடி | : | இல்லை |
| 10. மூச்சு சம்மந்தப்பட்டவை | : | 115 |
| 11. மற்றவைகள் | : | 368 |
| | | 748 |

**<u>வயிற்று போக்கு நோய்</u> :**

இந்நோயை கட்டுப்படுத்த ஆணையாளர் அவர்கள் தலைமையில் போர்கால நடவடிக்கை மேற்கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வயிற்றுபோக்கு நோயை கட்டுப்படுத்த தேவையான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டது.

குடிநீர் விநியோகத்திற்கு தேவையான பிளிச்சிங் பவுடர் வாங்கி குடிநீரில் கலக்கப்பட்டு குடிநீர் பரிசோதிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. மேலும் தொற்று நோய் பரவாமல் இருக்க குடிநீரில் குளோரின் liquid கலக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பொது மக்கள் கண்ட இடங்களில் மல ஜலம் கழிப்பதை நிறுத்த துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது.

ஓட்டல்கள், சாப்பிடும் விடுதிகள், இனிப்பு கடைகள் டீ கடைகள் போன்றவற்றை ஆணையர் அவர்கள் நேர்முக ஆய்வு செய்து பொதுமக்களை பாதிக்கா வண்ணம் குடிப்பதற்கு கொதித்த நீரை பயன்படுத்தவும் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது.

நகராட்சி ஆடு, மாடு வதை செய்யும் இடத்தில் வதை செய்யப்பட்டு முத்திரை குத்தப்பட்டு சுகாதாரமான முறையில் எடுத்து செல்லப்பட்டு விநியோகிக்க உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டது.

வயிற்று போக்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், திருப்பத்தூர் அவர்களின் அறிவுரைப்படி பெரால்கான், செப்ட்ரான், டெட்ராசைக்கிளின், அனாசின், டாக்சி சைக்கிள், பியோரோசின் போன்ற மாத்திரைகள் வழங்கப்பட்டு நகரின் பல பகுதிகளில் உள்ள முக்கியஸ்தர்கள் சேவை மனப்பான்மை உள்ளவர்கள் சமூக நல ஊழியர்கள் மற்றும் அங்கன்வாடி, மதிய உணவு அமைப்பாளர்களுக்கு போதிய மருந்து மாத்திரைகள் கொடுத்து தினசரி அப்பகுதியை பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும், முன்னெச்சரிக்கையாக நோய் அறிகுறி உள்ளவர்களுக்கும் உடனடியாக வழங்கப்பட்டு மேற்கண்ட நோய் உடனடியாக கட்டுப்படுத்தப்பட்டது. இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் ந.க.எண்.17034/2012/ஜே2 நாள் :22.10.2012-ந் தேதிய சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களால் பரவும், டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா வைரஸ் காய்ச்சல் போன்றவைகள் வராமல் முன்னெச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கை எடுக்க ஒவ்வொரு வார்டிலும் கொசு மருந்து அடிக்கும் பெரிய புகை போக்கி TURBO Fogging Machine (75 லிட்டர் கொள்ளவு கொண்டது) கொண்டு புகைமருந்து அடிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமில்லாமல் சிறிய தெருக்களில் வண்டி போகாத இடங்களில் Handle Fogging

Machine-க் கொண்டு கொசு புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், திருப்பத்தூர் அவர்களின் ந.க.எண்.4158/2012/எச்1 நாள் 30.11.2012-ந் தேதிய கடிதத்தின்படி மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரு.205/- என 40 (DBC) தற்காலிக தினக்கூலி பணியாளர்களைக்கொண்டு அபேட்கரைசல் ஒவ்வொரு வார்டிலும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் நல்ல தண்ணீரிலும், நீர்த்தேக்க தொட்டிகளிலும், கிணற்றிலும் அபேட் கரைசல் ஊற்றப்பட்டு வருகிறது.

**<u>நோய் தடுப்பு நடவடிக்கைகள் :</u>**

| தடுப்பு ஊசியின் பெயர் | : | முழுமையாக பயன் அடைந்த நபர்கள் |
|---|---|---|
| டி.டி. (கற்பிணி தாய்மார்கள்) | : | 1550 |
| போலியோ | : | 1532 |
| டி.பி.டி. | : | 1532 |
| தட்டம்மை ஊசி | : | 1532 |
| பி.சி.ஜி. | : | 1532 |
| டி.டி. (5-6 வயதுடையோர்) | : | 1620 |
| டி.டி. (10 வயதுடையோர்) | : | 1610 |
| டி.டி. (16 வயதுடையோர்) | : | 1600 |

அரசு உதவியுடன் பொது மக்கள் சார்புடைய தங்கள் மூலமாகவும் நகரிலுள்ள அனைத்து டாக்டர்கள் ஒத்துழைப்புடனும் பிறந்த மூன்று மாத குழந்தை முதல் பள்ளி பிள்ளைகள் மற்றும் கருவுற்ற பிள்ளைபேறு பெற்ற பால் ஊட்டும் தாய்மார்களுக்கும் நோய் தடுப்பு ஊசிகள், இரும்பு சக்தி மாத்திரைகள், வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக வீடு வீடாக சென்று வழங்கப்பட்டு வருகிறது. ரோட்டரி, அரிமா சங்கம் மற்றும் சார்புடைய சங்கங்கள் பெரிதும் ஒத்துழைப்பு நல்கி வருவதும் பெரிதும் போற்றப்படகூடியதாகும். வைட்டமின் ஏ 5 வயதுக்குட்பட்ட பள்ளிக்கு செல்லும் பிள்ளைகளுக்கும் டி.டி. 10 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் போடப்பட்டது. தேசிய தீவிர போலியோ தடுப்பு திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட பகுதிகளில் இரண்டு தவணையாக போலியோ சொட்டு மருந்து 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போடப்பட்டது. இதன் விவரம் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டது.

| தேதி | டோஸ் | 0-5 வயதுக்குட்பட்ட பயனடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி – 2019 | முதல் தவணை | 11201 |
| பிப்ரவரி – 2019 | இரண்டாவது தவணை | 11103 |

மேலும் 31.05.1992 முதல் நகரின் குறைந்த செலவிலான நீரளிப்பு மல அறைகள் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு தனி நபர் மல அறைகள் நீரளிப்பு மல அறைகளாக மாற்றப்பட்டுவிட்டது. ஆகையால் கலவை உரம் தயாரிக்க இயலவில்லை. தற்பொழுது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அந்தந்த வார்டுகளில் உள்ள வீடுகளில் உள்ள குப்பைகளை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து சம்மந்தப்பட்ட துப்புரவு பணியாளரிடம் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தூய்மை இந்தியா திட்டத்தினை நிறைவேற்றுதல் மற்றும் திடக்கழிவுகளை குறைத்திடும் மறுசுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாணை (நிலை) எண்:37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி.(IV) துறை நாள்: 13.04.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்: 26458/2016/தமி1-2 நாள்:29.05.2017 அவர்களின் செயல் முறை உத்தரவின் படி இந்நகராட்சியில் இரண்டு மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒன்பது பரப்புரையாளர்கள் அமைத்து மேற்படி பணிகளை செயல்படுத்த அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டதின் பேரில் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியில் தனிநபர் வீடுகளில் உள்ள கழிப்பறைகள் பொது கழிப்பிடங்களில் உள்ள வசதிகள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு நிலை தனிநபர் வீடுகளில் திடக்கழிவு மேலாண்மை பணி செயல்படுத்தவும் உணவு விடுதி, கல்யாண மண்டபம், பேக்கரி மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றில் மறுசுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு செய்யப்பட்டு தனிநபர் வீடுகளில் கழிப்பிடம் இல்லாத வீடுகளில் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு கணக்கெடுப்பில் 919 கண்டுபிடித்து தனி நபர் வீடுகளில் கழிப்பிடங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**துப்புரவு :**

இந்நகரில் பொது மல அறைகள் குடிசை வாழ் மக்கள் பகுதியில் உள்ளன. நகரில் முக்கிய பல்வேறு இடங்களில் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டுவதற்கான கருத்துருக்கள் உள்ளன. தள்ளு வண்டிகள் 65 மூலம் நகரில் தெருக்களில் சேகரிக்கப்படும் குப்பையை எடுத்து வந்து நகரில் உள்ள உர கிடங்குகளில் சேர்க்கப்படுகிறது. துணை உரகிடங்குகளில் சேகரிக்கப்படும் குப்பையை லாரி மூலம் நகராட்சி கலவை உரகிடங்கிற்கு அப்புறப் படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அரசாணை எண்.293 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:26.11.2010 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் நேர்முக கடித எண்.30335/2009/பாசாதி-2, நாள்:16.12.2010-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பேரில் இந்நகராட்சிக்குட்பட்ட இடங்களில் கழிவு நீர் நச்சுத் தொட்டிகளில் (Septic Tank) சுத்தம் செய்யும் பணியில் நச்சுத் தன்மை கொண்ட விஷவாயு வெளியேறுவதன் காரணமாக, மனித உயிருக்கு ஏற்படும் இழப்பை தவிர்க்கும்

பொருட்டு, எக்காரணம் கொண்டும் துப்புரவு பணியாளர்கள் இறங்கி பணி செய்யக்கூடாது எனவும், அதற்கான உரிய இயந்திரங்கள் அல்லது உயிர் பாதுகாப்பு தலை கவசங்களைக் (Safety Equipmetns) கொண்டு பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அதன் அடிப்படையாக கழிவுநீர் நச்சுத் தொட்டி சுத்தம் செய்வதற்காக வேண்டி உயிர் பாதுகாப்பு கவசங்கள் வாங்கி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு 3.50 ஏக்கர் நிலப்பரப்பில் நகராட்சி எல்லைக்குள் சென்னை பெங்களூர் தேசீய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது. இதில் தற்பொழுது விரிவுபடுத்தப்பட்டு வரும் தேசிய நெடுஞ்சாலைதுறை 0.48 செண்ட் நிலத்தை நில ஆர்ஜிதம் செய்தள்ளது. நில ஆர்ஜிதம் செய்தது போக மீதி உள்ள 3.02 ஏக்கர் நிலம் உபயோகத்தில் உள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கலவை உரகிடங்கு விரிவுபடுத்த வேண்டியுள்ளதால் வேப்பமர சாலையில் 6.79 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. மேற்படி இடத்தில் நுண்ணுயிர் உரமாக்கும் திட்டம் (Micro Compost Centre) பணிக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஒரு துப்புரவுபணி மேற்பார்வையில் அவர்களுடன் 4 துப்புரவு பணியாளர்களுடன் கலவை உரக்கிடங்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் 31.05.1992 முதல் நகரில் நீரளிப்பு மல அறை கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு தனி நபர் மல அறைகள் நீரளிப்பு மல அறையாக மாற்றப்பட்டுவிட்டது. ஆகையால் உரத்திற்காக மலம் செல்வதில்லை. வளையாம்பட்டு உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், நுண்ணுயிர் உரமாக்கும் திட்டம் பணிக்கு (Micro Compost Centre) மற்றும் கீழ்கண்ட இடங்களில் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>அபாயமும் மற்றும் அருவருப்பும் உள்ள தொழில்கள்</u> :**

எல்லா அபாயகரமானதும் அருவருப்புத் தரத்தக்கதுமான தொழில்களுக்குரிய உரிமையானைக் கட்டணம் செலுத்தி தொழில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. விற்பனை பொருட்கள் இடத்திற்கு தகுந்தாற்போல் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு விற்பனை நிலையங்களையும் பொது நல பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது பார்வையிட்டு வந்துள்ளார்கள். இவ்வினங்களுக்கு உரிமையாணை வழங்கியதன் மூலம் நடப்பு ஆண்டில் ரு.3,01,822/- வரவு வரப்பெற்றுள்ளது.

**<u>கழிவுநீர் திட்டம்</u>**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் இல்லை. இந்நகராட்சிக்கு கழிவுநீர் பண்ணை இல்லை. நகரில் உள்ள திறந்த சாக்கடைகளை நகராட்சி துப்புரவு பணியாளர்களால் கழிவுநீர் தேங்காவண்ணம் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

**<u>நகர பொது சுகாதாரமும் இதர இனங்களும்.</u>**

அ) நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருக்க வசதியாக வீடுகள் (Quarters) அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு வீட்டு வசதி கொடுக்கப்படாத பணியாளர்களுக்கு வீட்டு வாடகைபடி ஊதியத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் எல்லா துப்புரவு பணியாளர்களுக்கும் சீருடைகள், மழைகோட்டும் மற்றும் காலனிகள் வழங்கப்பட்டும், சீருடைகள் சுத்தம் செய்து கொள்வதற்கான சீருடைகள் சுத்தம் செய்யும் படியாக மாதம் ரூ.100/- மற்றும் துப்புரவு படி தலா ரூ.94/- வழங்கப்பட்டு வருகிறது.

**<u>ஆ) தீ தடுப்பு</u>**

நகராட்சி அலுவலகத்தில் தீ தடுப்பு சாதனங்கள் இரண்டு அவசர தேவைக்காக பொருத்தப்பட்டு இருக்கிறது. அரசினரால் தீ தடுப்பு நிலையம் ஒன்று இந்நகரில் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>இலாபகரமானவைகள்</u>**

இந்நகராட்சியால் பராமரித்துவரும் ஓட்டல் கட்டடம் உள்ளபடி நிரந்தர கடைகள், இரும்பு பங்கு கடைகள், காலியிடம் போன்றவைகளின் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வருமானம் கிடைத்தது.

| **<u>கடையின் விவரம்</u>** | | **<u>2018-19 வருட வருமானம்</u>** |
|---|---|---|
| 1. நிரந்தர ஜின்னாரோடு கடை (8 கடைகள்) | - | 400206/- |
| 2. பொதுகடைகள் | - | 280137/- |
| 3. ஐ.யு.டி.பி. கடைகள் | - | 2096973/- |
| 4. எம்.யு.டி.எப். கடைகள் | - | 306318/- |
| 5. ஐ.டி.எஸ்.எம்.டி. கடைகள் | - | 784709/- |
| 6. மற்றவை | - | 422553/- |
| 7. நகராட்சி அலுவலக கடைகள் | - | 253749/- |
| 8. மலங்கு ரோடு கடைகள் | - | 219135/- |

**<u>போக்குவரத்து</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான லாரியோ, பஸ் போக்குவரத்தோ இல்லை. பஸ் ரூட்டும் எடுத்து நடத்தவில்லை.

**சந்தை பேருந்து நிலையங்கள் முதலியன**

அறிக்கையாண்டின் இதன் முந்தைய இரு ஆண்டுகளில் சந்தை பேருந்து நிலையம் மற்றும் ஆடு, மாடு வதை செய்யுமிடம் ஆகியவற்றின் மூலம் கீழ்க்குறிப்பிட்டவாறு வருமானம் கிடைத்துள்ளது.

| நிலையத்தின் பெயர் | 2016-17 | 2017-18 | 2019-20 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. வாரச்சந்தை சந்தை | 10,75,000 | 11,28,750 | 1244447 |
| 2. பேருந்து நிலையம் | 3,78,000 | துறை வசூல் | 464152 |
| 3. ஆடு அடிக்கும் தொட்டி | 2,58,500 | 2,71,425 | 299245 |
| 4. மாடு அடிக்கும் தொட்டி | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை | 2,26,000 | 249165 |
| 5. பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 4,15,500 | 4,36,275 | 480993 |
| 6. வாகன பாதுகாப்பு | 8,68,700 | 9,12,135 | 371516 |
| 7. சாலைஓரக் கடைகள் | 11,30,000 | 11,86,500 | 1311230 |
| 8. பக்ரீத் பண்டிகைக்கு ஆடு /மாடு சுங்கம் | 30,900 | 32,445 | 35771 |
| 9. நகராட்சி எல்லைக்குள் நுழையும் சரக்கு லாரி. | 1,51,000 | 1,58,550 | 174801 |
| 10. உழவர் சந்தையில் சைக்கிள் நிறுத்துமிடம் | நீக்கம் செய்யப்பட்டுள்ளது | | |

**அ. சந்தை வரி**

இந்நகரமன்றம் ஒரு வாரச்சந்தை பராமரித்து வருகிறது. வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலத்தில் விட்டதில் ரூ.1244447/- பெறப்பட்டது. தினசரி அங்காடியை நடத்தவில்லை.

**பேருந்து நிலையம்**

நகரமன்றம் பராமரித்து வரும் பேருந்து நிலையத்தில் அறிக்கையாண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ரூ.480993/- வசூல் மேற்கொள்ளப்பட்டது. பேருந்து நிலையத்தில் பயணிகள் உட்கார ஓய்வு அறையும் குடிநீர் வசதியும் கழிப்பிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டன. இரு பாலருக்குமான மல அறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>மாடு வதைக்குமிடங்கள்</u>**

இந்நகரமன்றம் ஆடு வதைக்கும் இடம் ஒன்றையும் மற்றும் மாடு வதைக்கும் இடம் ஒன்றையும் பராமரித்து வருகிறது. ஆடு வதைக்கும் இடத்தில் ரூ.299245/- மாடு வதைக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலத்தில் விட்டதில் ரூ.249165/- வருமானம் கிடைத்துள்ளது. இங்கு வதை செய்யப்படும் பிராணிகள் அரசு கால்நடை மருத்துவமனை மருத்துவ அலுவலர் அவர்களின் பரிசோதனைக்கு பின் வதை செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி வதைக்கப்படும் இடங்களை சுகாதார முறைப்படி வைத்து பராமரிக்கப்படுகிறது.

இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களை சென்ற ஆண்டைப்போலவே அறிக்கை ஆண்டிலும் பராமரிக்கப்பட்டது. கோஷா பெண்களுக்கு தனியாக ஒரு பூங்காவும் பொதுவாக ஒரு பூங்காவும் உள்ளது.

## <u>நகரமைப்பு பிரிவு</u>

நகரமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் ஒரு நகரமைப்பு அலுவலர் பணியிடமும் இரு நகரமைப்பு ஆய்வர்கள் ஒரு இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு சங்கிலி பணியாளர் பணியிடமும் உள்ளது. (அறிக்கையாண்டில் ஒரு நகரமைப்பு அலுவலர் ஒரு நகரமைப்பு ஆய்வர் மற்றும் ஒரு சங்கிலியாளர் பணியில் இருந்து வருகின்றார்.

அறிக்கையாண்டில் ஏற்பட்ட மொத்த செலவு ரூ.13.12

வாணியம்பாடி நகரமன்ற உள்ளூர் திட்டக்குழும பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முழுமையான திட்டம் ஆகும். 7 அங்கீகரிக்கப்பட்ட விரிவு மேம்பாட்டுத் திட்டங்களும் அமலில் இருந்து வருகிறது. முழுமை திட்டம் குறித்த குறிப்பு தரப்படவில்லை.

**<u>முழுமைத்திட்டம்</u>**

1971-ஆம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 10(1)ன் கீழ் வாணியம்பாடியை, உள்ளூர் திட்டப் பகுதியாக உரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 20.09.1973-ஆம் தேதிய அரசு ஆணை எண் 2001-ல் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனை மேற்படி சட்டம் 10(4) பிரிவின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 16.03.1974-ஆம் தேதிய அரசு ஆணை எண் 626-ல் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

வருவாய் கிராமங்களான 1. வாணியம்பாடி (41) 2. அம்பூர்பேட்டை(77) 3. கோவிந்தபுரம்(79) 4. தேவஸ்தானம்(89) ஆகிய கிராமங்கள், வாணியம்பாடி உள்ளூர் திட்டப்பகுதியாக அறிவிப்பு செய்யப்பட்டிருப்பினும், மேற்படி கிராமங்களின் பகுதிகள் மட்டும்தான் வாணியம்பாடி நகராட்சி எல்லைப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே வாணியம்பாடி நகராட்சி பகுதி முழுவதும் மட்டும்தான் வாணியம்பாடி உள்ளூர் திட்டப்பகுதியாகும் என வீட்டு வசதி மற்றம் உள்ளாட்சித்துறையின் 14.10.1985-ஆம் தேதிய அரசு கடிதம் எம்.எஸ்.எண் 1964-ல் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை 650, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை நாள் : 08.07.1975-ன்படி அளிக்கப்பட்ட வாணியம்பாடி உள்ளூர் திட்டப் பகுதிக்கு மேற்படி சட்டப்பிரிவு 11(1)-ன் கீழ் அமைக்கப்பட்டு அரசாணை 651 ஊரக வளர்ச்சி மற்றம் உள்ளாட்சித்துறை நாள் : 08.03.1975-ல் ஒரே உள்ளூர் திட்டக்குழும பகுதியான வாணியம்பாடி நகராட்சியே உள்ளூர் திட்டக் குழுமமாக அறிவிப்பை மேற்படி சட்டம் 11(1)-ன் கீழ் செய்யப்பட்டது.

முழுமைத்திட்டம் (தயாரித்தல், பிரசுரித்தல் அங்கீகரித்தல்) விதி முறைகளின்படி (அரசாணை 652 ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை நாள் : 08.04.1975) இவ்வுள்ளூர் திட்டக்குழும பகுதிக்கு நிலம் மற்றம் கட்டட பயன் வரைபடம் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 31.12.1984-ஆம் தேதிய நக.எண் 3107/84வஆம4-ல் தயாரிக்கப்பட்டதை இவ்வுள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் எண் 2 நாள் : 19.01.1995-ல் ஏற்றுக்கொண்டது.

வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 31.12.1984-ஆம் தேதிய ந.க.எண் 3107/84 வ.ஆ.ம.4-ல் இக்குழும பகுதிக்கு உத்தேச நிலப்பயன் சம்மந்தமாக வரைவு முழுமைத்திட்டம் தயாரிக்கப்பட்டதை இவ்வுள்ளூர் திட்டக்குழுமத்தின் 19.01.1985 ஆம் தேதிய தீர்மானம் எண் 3-ல் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேற்படி சட்டம் பிரிவு 24(2)ன் கீழ் நகர்ப்புற வளர்ச்சி துணையின் 30.10.1985-ஆம் தேதிய அரசு ஆணை எம்.எஸ்.எண் 1021-ல் வாணியம்பாடி உள்ளூர் திட்டப்பகுதிக்கு முழுமைத்திட்டம் தயாரித்தல் சம்மந்தமான அறிவிப்பு ஒன்றினை மேற்படி சட்டம் 26-வது பிரிவின் கீழ் வெளியிட இசைவு அளிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு 16.04.1986-ஆம் தேதிய தமிழ்நாடு அரசு இதழ் பாகம் 6, பிரிவு 1, பக்கம் 122-ல் பிரசுரம் செய்யப்பட்டது. 5.5.1987-ஆம் தேதிய வடாற்காடு மாவட்ட அரசு இதழில் பக்கம் 29 மற்றும் 20.08.1986-ஆம் தேதிய தினமலர் (சென்னை) நாளிதழிலும் மறு பிரசுரம் செய்யப்பட்டது.

வரைவு முழுமைத்திட்டம் சம்மந்தமாக பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளூர் திட்டக்குழுமம் தனது 05.10.1987-ஆம் தேதிய தீர்மானம் எண் 4-ல் ஏற்றுக்கொண்டு அதன்படி மாற்றம் செய்ய தீர்மானம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு அன்னாரது குறிப்புரையை நக.எண் 5881/87முதி1, நாள் : 04.03.1988-ல் கடிதம் மூலம்பெறப்பட்டது. மேற்படி குறிப்புரைகளின்படி வரைவு முழுமைத்திட்ட உத்தேச நிலப்பயன் வரைபடம் மற்றும் அட்டவனையில் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு இவ்வலுவலக 05.09.1988-ஆம் தேதிய ந.க.எண் 6219/87/எப்1 கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் மூலம் சமர்பிக்கப்பட்டது.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் 07.02.1999-ஆம் தேதிய அரசு ஆணை எம்.எஸ்.எண் 135-ல் வாணியம்பாடி முழுமை திட்டத்திற்கு மேற்படி சட்டம் 28-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. இது சம்மந்தமாக 28.02.1999-ஆம் தேதிய தமிழ்நாடு அரசு

இதழ் வெளியீட்டு எண் 8, பாகம் 11, பிரிவு 2, பக்கம் 115-ல் அறிவிப்பு ஒன்று பிரசுரம் செய்யப்பட்டு செயலுக்கு கொணரப்பட்டது. மேலும் 1995-ஆம் வருடத்திய செப்டம்பர் மாதத்திய மாவட்ட அரசு இதழிலும் மறு பிரசுரம் செய்யப்பட்டது. முழுமைத்திட்டத்தில் மறு ஆய்வு பணி நடைபெற்று வாணியம்பாடி நகராட்சி உள்ளூர் திட்டக்குழும பகுதி மறு ஆய்வு திட்டத்திற்கு அரசு ஆணை எண் 25, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளாட்ச்சித்துறை நாள் : 07.02.2005 தேதிய அரசாணை மூலம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 24(2)ன் கீழ் அரசு இணக்கம் அளித்தள்ளது. இணக்கம் அளிக்கப்பட்ட அரசாணை நகல், வாணியம்பாடி முழுமைதிட்ட அறிக்கை இரண்டு பிரதிகள் பெறப்பட்டுள்ளது. இணக்கம் அளிக்கப்பட்ட மறு ஆய்வு முழுமைத்திட்டத்தினை நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 26 (தயாரிப்பு அறிவிப்பு மற்றும் அங்கீகரித்தல்) மற்றும் முழுமைத்திட்ட விதிகள் 7,8,9,10ன்படி தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஏப்ரல் 12.2006 தேதிய தமிழ்நாடு அரசிதழில் படிவம் 1 வெளியிடப்பட்டுள்ளது.

1. **<u>முஸ்லீம்பூர் வடக்கு விரிவு மேம்பாட்டுத் திட்டம்</u>:**

இத்திட்டம் 1920-ம் வருடத்திய நகரமைப்புச் சட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சியின் 07.07.1972-ஆம் தேதிய அரசு ஆணை எண் 1411-ல் அங்கீகரிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொணரப்பட்டது.

1971-ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டத்தின் 125(2)(எ) பிரிவின் படி 1920-ஆம் வருடத்திய நகரமைப்பு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டத்தின் நிகரான பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதாகும். இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது மேற்படி சட்டப்படி மறு ஆய்வு செய்து, தேவையான திட்ட மாற்ற திருத்தங்கள் தயாரித்து அரசின் ஏற்பளிப்பிற்கு பணிந்தனுப்ப வேண்டும்.

எனவே இத்திட்டமும், வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் மூலம் மறு ஆய்வு செய்யப்பட்டு வரப்படுகிறது. மறு ஆய்வு நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் இணக்கம் பெற மேற்படி சட்டம் 33(1) பிரிவின் கீழ் சமர்பிக்கப்படும்.

2. **<u>காந்திநகர் தென்மேற்கு விரிவு அபிவிருத்தி திட்டம்</u>**

இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 30.05.1972-ஆம் தேதிய அரசு ஆணை எண் 1085-ல் அங்கீகரிக்கப்பட்டு செயல்முறைக்கு வரப்பெற்றது. செயல்முறைக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டால் மற்றும் இத்திட்டப்பகுதியில் புதியதாக புறவழிச்சாலை அமைந்துள்ளதாலும் 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம் 32(2)(எ) பிரிவின்படி வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் மூலம்மறு ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மாற்ற தொகுப்புகள் தயாரிக்கப்பட்டது. மறு ஆய்வு திட்ட

மாற்று தொகுப்புகளுக்கு மெற்படி சட்டம் 33(1) பிரிவின் கீழ் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் இணக்கம் பெற இவ்வுள்ளூர் திட்டக் குழுவின் 31.05.1999 ஆம் தேதிய எண்.5 தீர்மானம் பெறப்பட்டு இவ்வலுவலக 8.12.1999 ஆம் தேதிய நக.எண் 2201/99/எப்1, கடிதத்துடன் திட்ட மாற்று தொகுப்புகள் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் 200 அடி அகல புற வழிசாலை அமைக்கப்பட்டள்ளதாலும் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடத்தின்படி உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைக்க சாத்ய கூறுகள் இல்லாததாலும் மேற்படி திட்ட வரைபடங்களை மக்களுக்கு பயன்படும் வகையிலம் நிலையில் உள்ள அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு, திருத்திய வரைபடம் திட்ட தொகுப்பு தயார் செய்து ஒப்புதல் வழங்க கோரி தீர்மானம் எண் 3 நாள் : 27.02.2004ல் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் இயற்றியுள்ளது. அதன்படி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. **<u>புதூர் கிழக்கு விரிவு மேம்பாட்டுத் திட்டம்</u>**

இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 24.05.1973-ஆம் தேதிய அரசு ஆணை எண் 1039-ல் அங்கீகரிக்கப்பட்டு செயலுக்கு வரப்பெற்றது. செயல்முறைக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும் இத்திட்டப்பகுதியில் புதியதாக புற வழிச்சாலை அமைந்துள்ளதாலும் ஏற்பட்ட மாற்றங்களுக்காக 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம்32(2)(எ) பிரிவின்படி வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் மூலம் மறு ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மாற்ற தொகுப்புகள் தயாரிக்கப்பட்டது. மறு ஆய்வு திட்ட மாற்றங்களுக்கு மேற்படி சட்டம் 33(1)ன் கீழ் இணக்கம் கோர இவ்வுள்ளூர் திட்டக்குழுமத்தின் முன் பொருள் வைக்கப்பட்டுள்ளது. இவ்வுள்ளூர் திட்டக்குழுவின் 24.05.2001-ஆம் தேதிய தீர்மானம் எண் 1 பெறப்பட்டு இவ்வலுவலக 08.06.2001 ஆம் தேதிய ந.க.எண்.12993/2001/எப்1 கடிதத்துடன் திட்ட மாற்ற தொகுப்புகள் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

4. **<u>புதூர் மேற்கு விரிவு மேம்பாட்டுத் திட்டம்</u>**

மேற்படி திட்டம் 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம், பிரிவு 29-ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2 அவர்களின் 31.08.1989-ந் தேதிய ந.க.எண் 32204/84/டி4 செயல்முறைகளில் அங்கீகரிக்கப்பட்டு செயலுக்கு வரப்பெற்றது. இத்திட்டம் செயலுக்கு வந்த பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும் இத்திட்டப் பகுதியில் புதியதாக புற வழிச்சாலை அமைந்துள்ளதாலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்காக இத்திட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அலுவலகம் மூலம் மற்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்ட மாற்று தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு வரப்படுகின்றது. மறு ஆய்வு திட்ட மாற்று தொகுப்புகளுக்கு மேற்படி சட்டம் 33(1) பிரிவின் கீழ் நகர் ஊரமைப்பு

சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கம் பெற இவ்வுள்ளூர் திட்டக்குழுவின் 14.06.1992 தேதிய தீர்மானம் எண் 5 தீர்மானம் பெறப்பட்டு இவ்வலுவலக 19.06.2002-ஆம் தேதிய நக.எண் 10198/92/எப்1 கடிதத்துடன் திட்ட மாற்று தொகுப்புகள் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் 200 அடி அகல புற வழிசாலை அமைக்கப்பட்டள்ளதாலும் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடத்தின்படி உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைக்க சாத்ய கூறுகள் இல்லாததாலும் மேற்படி திட்ட வரைடங்களை மக்களுக்கு பயன்படும் வகையிலம் நிலையில் உள்ள அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு, திருத்திய வரைபடம் திட்ட தொகுப்பு தயார் செய்து ஒப்புதல் வழங்க கோரி தீர்மானம் எண் 3 நாள் : 27.02.2004ல் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் இயற்றியுள்ளது. அதன்படி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. **விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 6**

இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 31.12.1973-ஆம் தேதிய அரசு ஆணை எம்.எஸ்எண் 2876-ல் அங்கீகரிக்கப்பட்டு செயலுக்கு வரப்பெற்றது. மேற்படி திட்டப்பகுதியில், புதியதாக புறவழிச்சாலை அமைந்துள்ளதாலும், திட்டம் செயலாக்கத்திற்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும் ஏற்பட்ட மாற்றங்களுக்காக இத்திட்டம் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தால் மறு ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மாற்ற தொகுப்புகள் தயாரிக்கப்பட்டது. திட்ட மாற்றங்களுக்காக 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33(1)-ன் கீழ் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் இணக்கம் கோர உள்ளூர் திட்டக்குழுமத்தின் 31.05.1999 ஆம் தேதிய எண் 4 தீர்மானத்துடன் இவ்வலுவலக 8.12.1999-ஆம் தேதிய நக.எண் 2201/99/எப்1 கடிதம் மூலம் திட்ட மாற்ற தொகுப்புகள் வேலூர் நகரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

7. **விரிவு மேம்பாட்டுத் திட்டம் 7**

1971-ஆம் சட்டம் பிரிவு 29-ன் கீழ் இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2 அவர்களின் 18.07.1983 ஆம் தேதிய ந.க.எண்.36124/79/டி1, செயல்முறைகளில் அங்கீகரிக்கப்பட்டு 04.01.1984-ஆம் தேதிய தமிழ்நாடு அரசு இதழ் பாகம் 6 பிரிவு 1, பக்கம் 3-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் 04.01.1984 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம் 32(2)ன்படி இத்திட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அலுவலகத்தால் மறு ஆய்வு செய்யப்பட்டு திட்ட மாற்றங்களுக்காக தொகுப்புகள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 22.02.1999-ஆம் தேதிய நக.எண் 2237/98-ல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டம்

33(1) பிரிவின் கீழ் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் இணக்கம் பெற இவ்வுள்ளூர் திட்டக்குழுமத்தின் 31.05.1999-ஆம் தேதிய தீர்மானம் எண் 2-ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி திட்ட மாற்ற தொகுப்புகளுக்கு பரிந்துரைகள் செய்து நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்பிக்க இவ்வலுவலக 8.12.1999-ம் தேதியநக.எண் 2291/99/எப்1 கடிதத்தில் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு திட்ட மாற்றத் தொகுப்புகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் 200 அடி அகல புற வழிசாலை அமைக்கப்பட்டள்ளதாலும் திருத்தி அமைக்கப்பட்ட வரைபடத்தின்படி உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைக்க சாத்ய கூறுகள் இல்லாததாலும் மேற்படி திட்ட வரைடங்களை மக்களுக்கு பயன்படும் வகையிலம் நிலையில் உள்ள அபிவிருத்திகளை கருத்திற்கொண்டு, திருத்திய வரைபடம் திட்ட தொகுப்பு தயார் செய்து ஒப்புதல் வழங்க கோரி தீர்மானம் எண் 3 நாள் : 27.02.2004ல் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் இயற்றியுள்ளது. அதன்படி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பேரில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.2887/05/டிபி1 நாள் : 24.01.2006 எண்ணிட்ட கடிதத்தில் சாலைகளின் பட்டியலுக்கு ஒப்புதல் மற்றும் விரிவு அபிவிருத்தி திட்ட எண்.7-ல் திட்டச் சாலை (பாகம்) நீக்கம் செய்து உத்திரவு வழங்கப்படுகிறது.

7. **<u>விரிவு மேம்பாட்டுத் திட்டம் எண் 8</u>**

இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 20.07.1973-ஆம் தேதிய அரசாணை எண் 1173-ல் அங்கீகரிக்கப்பட்டு செயல்மறைக்கு வந்துள்ளது. அங்கீகரிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலான இத்திட்டம் 1971-ஆம் வருடத்திய நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகத்தால் மறு ஆய்வு செய்யப்பட்டு ஒருங்கிணைந்த திட்ட மாற்றங்களை இவ்வலுவலக நக.எண் 2238/98, நாள் : 22.02.1999-ல் தயாரிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த திட்ட மாற்றங்களுக்கு நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் தருமாறு கேட்டுக்கொள்ள இவ்வுள்ளூர் திட்டக்குழுமத்தின் 31.05.1999-ஆம் தேதிய தீர்மானம் எண் 3-ல் தீர்மானிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த திட்ட வரைவு மாற்றங்களுக்கு அறிவிப்பு வெளியிட நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் 12.04.2000-ஆம் தேதிய நக.எண் 37375/98/டிபி3, செயல்முறைகளில் மேற்படி சட்டம் பிரிவு 33(1)ன் கீழ் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது.

வரைவு திட்ட மாற்றங்கள் 17.05.2000-ம் தேதிய தமிழ்நாடு அரசு இதழில் வெளியீடு எண் 19, பாகம் 6 பிரிவு 1-ன் பக்கம் 179-ல் அறிவிப்பு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இவ்வுள்ளூர் திட்ட குழும அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் ஆகியவைகளின்

அறிவிப்பு பலகையில் முறையே 06.11.2000, 16.11.2000, 21.11.2000-ஆம் தேதிகளிலும் தினகரன் செய்திதாளில் 20.11.1999-ஆம் தேதியிலும் வேலூர் மாவட்ட அரசு இதழில் டிசம்பர் 2000 மாதத்திலும் மேற்படி அறிவிப்பு மறு பிரசுரம் செய்யப்பட்டது. இத்தகவல்களை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை-2 அவர்களுக்கு இவ்வலவலக 20.03.2001-ஆம் தேதிய நக.எண் எப்1/2202/99 கடிதம் மூலம் சமர்பிக்கப்பட்டது. பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. மறு ஆய்வு திட்ட மாற்ற தொகுப்புகளுக்கு மெற்படி சட்டம் 33(1)பிரிவின் கீழ் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கம் பெற இவ்வுள்ளூர் திட்டக் குழுவின் 19.09.2001ம் தேதிய தீர்மானம் எண் 2 தீர்மானம் பெறப்பட்டு இவ்வலுவலக 09.05.2002-ஆம் தேதிய நக.எண் 2202/99/எப்1 கடிதத்துடன் திட்ட மாற்ற தொகுப்புகள் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>கட்டட விண்ணப்பங்கள்</u>**

அறிக்கையாண்டில் வரப்பெற்ற மற்றும் முடிவு செய்யப்பட்ட கட்டிட விண்ணப்பங்களின் விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | 2018-2019-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை விண்ணப்பங்கள் | : -- |
| 2. | 01.04.2015 – 31.03.2016 மேற்படி அறிக்கையாண்டில் வரப்பெற்ற | |
| | கட்டட விண்ணப்பங்கள் | : 204 |
| | அனுமதி வழங்கப்பட்ட இனங்கள் | : 51 |
| | அனுமதி மறுக்கப்பட்டவை/திருப்பபட்டவை | : 153 |
| | நிலுவை ஏதுமில்லை | |
| 3. | மேற்படி அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | : 204 |
| 4. | மேற்படி அறிக்கை ஆண்டில் நிலுவை விண்ணப்பங்கள் | : --- |

ஆக்கிரமிப்புகள் (2014-15)

| | | |
|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டில் ஆரம்ப நிலை | : 9 |
| 2. | அறிக்கை ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | : 601 |
| 3. | அறிக்கை ஆண்டில் முடிவு செய்தவைகள் | : 599 |
| 4. | அறிக்கை ஆண்டு முடிவில் நிலுவை | : 2 |

**<u>தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல நிதி 1.0%</u>**

2018-2019 ஆம் ஆண்டில் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்ட கட்டட விண்ணப்பங்களில் சம்மந்தப்பட்ட உத்தேச கட்டுமானங்களின் மதிப்பீட்டில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல நிதிக்காக 0.1% சதவிகித சந்தா தொகைக்கண்டான வரைவு கேட்போலைகள் மேற்படி நல வாரியத்திற்கு மாதாமாதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அறிக்கை அண்டில் 1.0% சந்தா தொகைக்கான வரைவு கேட்போலைகள் மேற்படி நல வாரியத்திற்கு மாதாமாதம் அனுப்பிவைக்கப்பட்டது.

**<u>சொத்துவரி வசூல் 2018-2019</u>**

சொத்துவரியின் கீழ் நடப்பு ஆண்டில் கேட்பு வசூல் நிலுவை விவரம் கீழ் உள்ளபடியாகும்.

<u>ரு.இலட்சத்தில்</u>

| | **கேட்பு** | **வசூல்** | **தள்ளுபடி செய்தது அதிகப்படியாக செய்த தொகை** | **நிலுவை** |
|---|---|---|---|---|
| நடப்பு ஆண்டு | 457.12 | 197.68 | - | 259.44 |
| நிலுவை | 211.98 | 76.60 | - | 135.38 |
| **மொத்தம்** | **669.01** | **274.28** | - | **394.82** |

சொத்துவரி விதிப்பு எண்களின் மொத்த எண்ணிக்கை 17679 சொத்துவரி நடப்பு ஆண்டு மொத்த கேட்புத்தொகை ரு.408.56 இலட்சமாகும். நடப்பு ஆண்டு கேட்புத் தொகையில் ரு.200.86 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

**<u>தொழில்வரி</u>**

தொழில்வரி விதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1819

| | **கேட்பு தொகை** | **வசூல் தொகை** | **வரி வசூல் செய்யப்பட்ட தொகை** | **நிலுவைத் தொகை** |
|---|---|---|---|---|
| நடப்பு ஆண்டு | 43.12 | 38.97 | - | 4.15 |
| நிலுவை | 11.23 | 2.32 | - | 8.91 |
| **மொத்தம்** | **54.35** | **41.29** | - | **13.06** |

எல்லா வரியினங்களிலும் நடப்பு ஆண்டின் மொத்த வசூல் ரு.387.39 இலட்சம் ஆகும்.

**<u>வரிவிகிதம்</u>**

<u>அ) கட்டடங்கள்</u>

| | | |
|---|---|---|
| 1.பொது காரியங்களுக்காக | : | 10.00 |
| 2. நீரளிப்பு வரி | : | 3.50 |
| 3. கல்வி வரி | : | 2.50 |
| 4. நூலக வரி | : | 1.35 |
| | | ------ |
| | | 17.35 |
| | | ------ |

**ஆ. காலிமனை வரி**

அரசாணை (பல்வகை) எண்.150 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்: 20.08.2009 அரசாணை வெளியிடப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.41802/09/ஆர்1 நாள் : 07.09.2009-இல் கண்டுள்ள வகுக்கப்பட்டுள்ள வழிக்காட்டுதலின் அடிப்படையில், வாணியம்பாடி நகராட்சி தேர்வுநிலை என தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அரசாணையில் தேர்வுநிலை நகராட்சிக்கு பி.கிரேடு என வகை செய்யப்பட்டது. அதன்படி காலிமனை மீதான சொத்துவரி அமைவிடத்தைப்பொருத்து அ, ஆ மற்றும் இ என மூன்று நிலையாக பிரிக்கப்பட்டு அதற்கெதிரே ஒரு அரையாண்டிற்கு ஒரு சதுர அடிக்கு குறும தொகை மற்றும் பெரும தொகை பைசா விகிதத்தின் அடிப்படையில் செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டப் பட்டுள்ளது. இதனால் காலிமனை சொந்தக்காரர்களுக்கு காலிமனை மீதான சொத்து வரியை எளிமையான முறையில் செலுத்துவதற்கு எளிதாகப்பட்டுள்ளது. விவசாயத்திற்கென பிரத்தியோகமாகப் பயன்படுத்தப்படாமலும் கட்டிடங்கள் இல்லாமலும் அல்லது கட்டிடத்திற்கு அடுத்தாற்போல் இராமலும் அல்லது கட்டிடங்களை சேர்ந்திராமலும் உள்ள அனைத்து காலிமனைக்கும் பரப்பளவு அடிப்படையில் 01.10.2009 முதல் காலிமனை வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

**ஒரு அரையாண்டிற்கு ஒரு சதுர அடிக்கு பைசா வீதம்**

| மனை அமைவிடம் | பி. நிலை | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் | உயர்ந்த பட்சம் |
| (1) | (2) | (3) |
| அ. குடியிருப்புப் பகுதிகள் உள்ள தெருக்கள் | 15 | 30 |
| ஆ. முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச்செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 20 | 40 |
| இ. முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச் செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 30 | 50 |

இந்நகர தீர்மானம் எண்.326 நாள் : 18.09.2009-இல் காலிமனை வரிவிதிப்புக்கு மனை அமைவிடம் பகுதிகளாக பிரித்து வகைப்பாடு செய்துள்ள தெருக்களுக்கு ஒரு சதுர அடிக்கு குறும அளவு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு காலிமனை வரி விதிப்பு செய்யலாம் என தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி காலிமனை வரிவிதிப்பு செய்து கீழ்கண்டுள்ளவாறு கேட்பு நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

இது தவிர சொத்துவரியின் பேரில் ரூபாய் ஒன்றுக்கு பத்து பைசா வீதம் நூலக வரி விதிக்கப்பட்டு வசூல் தொகையை வேலூர் மாவட்டம் நூலக அலுவலர் அவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

சொத்துவரி, தொழில்வரி ஆகியவைகள் 1920 வருடத்தில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அதிகபட்ச வரி விதிக்கப்பட்டுள்ளது.

**<u>மக்கள் தொகையின் பேரில் வரிவிகிதம்</u>**

சொத்துவரி நடப்பு அண்டில் மக்கள் தொகையில் 95521 ஆகவும் சென்ற ஆண்டில் இது தலா 6.16% ஆகவும் மொத்தம் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 17679 ஆகவும் தொழில்வரி விதிப்புகளின் எண்ணிக்கை 1762 ஆகவும் அறிக்கை ஆண்டில் இருந்தது.

**<u>2018 -2019</u>**

| | **கேட்பு** | **வசூல்** | **தள்ளுபடி செய்தது அதிகப்படியாக வசூல் செய்தது** | **நிலுவை** |
|---|---|---|---|---|
| வரியினம் | 683.03 | 282.04 | - | 401.00 |
| வரியில்லா இனம் | 112.56 | 106.51 | - | 6.05 |
| **மொத்தம்** | **795.59** | **388.55** | - | **407.05** |

**<u>வரவு செலவு கணக்கு</u>** **(ரூ. இலட்சத்தில்)**

1. வருமானம் : 1385.43
2. செலவு : 1403.66
3. உபரி : (-)18.23

**<u>சாதாரண இனங்கள்</u>**

சாதாரண செலவு மொத்தம் ரூ.27.35 இலட்சம் செலவினங்கள் பெரும்பாலானவற்றை பொது வருவாய்களிலிருந்து ஈடு செய்யப்பட்டது.

**<u>கடன்கள்:</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிக்கான ஒருங்கிணைந்த கடன் (அரசுக் கடன்) தொகை ரூ.55.99 இலட்சத்தை தமிழக அரசு தள்ளுபடி செய்து உத்திரவிட்டது (அரசாணை நிலை எண்.149) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, நாள்:09.11.2007 இதர கடன் விவரங்கள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | 01.04.2018-ந் தேதியில் ஆரம்ப நிலுவை தொகை | நடப்பு நிதியாண்டில் செலுத்தப்பட்ட தொகை | | 31.03.2018-ந் தேதியில் நிலுவை தொகை |
|---|---|---|---|---|---|
| | | | அசல் | வட்டி | |
| 1 | டுபிட்கோ கடன் | 9,49,148 | -- | -- | 9,49,148 |
| 2 | ஹட்கோ கடன் | 114951470 | -- | -- | 114951470 |
| 3 | டி.என்.யு.பி.எம்.கடன் | 289600000 | -- | -- | 289600000 |
| 4 | கூடுதல் பேருந்து நிலையம் | 10064451 | 1058620 | 424265 | 11123071 |
| | **மொத்தம்** | **415565069** | | | **416623689** |

அறிக்கையாண்டில் கடனுக்காக அசல் ரூ.10,58,620/-ம், வட்டி ரூ.4,24,265/-ம் செலுத்தப்பட்டது.

**முதலீடுகள்**

----

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம்**

தமிழ்நாடு பள்ளி குழந்தைகள் மதிய உணவுத் திட்டம் நகராட்சி பள்ளிகளில படித்து வரும் 5 வயது முதல் 9 வயது வரையிலும் 10 வயது முதல் 14 வயது வரையிலான பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசு வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் அரசாணை எண் 11379 நாள் : 7.9.1982-ஆம் தேதிய கடிதத்தின்படி 15.09.1982 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 7 நகராட்சி ஆரம்ப பள்ளி, 7 நகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் ஒரு மேல்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 15 மையங்கள் நடைபெற்று வருகின்றது. தினம் 2313 மாணவ மாணவிகளுக்கு உணவு உண்ண அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் 2313 பிள்ளைகளுக்கு தினமும் முட்டை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் வெள்ளிக்கிழமை வேகவைத்த உருளைகிழங்கும், பிரதி செவ்வாய்கிழமைதோறும் பச்சைபயிறு அல்லது கருப்பு கொண்டை கடலை (முழு உருவில்) சத்துணவுடன் வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவு பிரிவில் ஒரு உதவியாளர் மற்றும் கணக்கரும், 11 அமைப்பாளர்களும், 10 சமையல்களும், 13 சமையல் உதவியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 2 சமையல் உதவியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. மேற்படி திட்டத்திற்கு அறிக்கையாண்டில் தளவாட சாமான்கள் மாவட்ட ஆட்சியர் (சத்துணவு பிரிவு) மூலம் வழங்கப்பட்டது, உதவியாளர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஒய்வூதியமும் சேர்த்து ரூ.35,35,985/-ம் மற்றும் உணவு செலவு மற்றும் சில்லரை செலவு ரூ.6,68,576/-ம் ஆக மொத்தம் ரூ.42,04,561/- தொகை 2018-2019-ஆம்

ஆண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 95 நாள் : 16.06.2004- ன்படி பிரதி வாரம் ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டை சத்துணவுடன் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

**<u>தணிக்கை தடைகள் நிலுவையிலுள்ள பத்திகளின் விவரம்:</u>**

**வாணியம்பாடி நகராட்சி**
**தணிக்கை தடை நிலுவை பத்திகளின் விவரம்**

| வ.எண் | வருடம் | மொத்த நிலுவை பத்திகள் | 27.06.2019 ம் தேதி வரை கூட்டமர்வில் நீக்கம் செய்யப்பட்டவை | நிலுவைப்பத்திகள் |
|---|---|---|---|---|
| 1 | 1992-1993 | 3 | 0 | 3 |
| 2 | 2000-2001 | 2 | 0 | 2 |
| 3 | 2001-2002 | 5 | 0 | 5 |
| 4 | 2002-2003 | 3 | 0 | 3 |
| 5 | 2003-2004 | 4 | 0 | 4 |
| 6 | 2004-2005 | 7 | 0 | 7 |
| 7 | 2005-2006 | 6 | 0 | 6 |
| 8 | 2006-2007 | 4 | 0 | 4 |
| 9 | 2007-2008 | 16 | 0 | 16 |
| 10 | 2008-2009 | 7 | 0 | 7 |
| 11 | 2009-2010 | 15 | 0 | 15 |
| 12 | 2010-2011 | 32 | 0 | 32 |
| 13 | 2011-2012 | 28 | 0 | 28 |
| 14 | 2012-2013 | 82 | 0 | 76 |
| 15 | 2013-2014 | 107 | 9 | 98 |
| 16 | 2014-2015 | 84 | 5 | 79 |
| 17 | 2015-2016 | 61 | 2 | 59 |
| 22 | 2016-2017 | 68 | 17 | 51 |
| 23 | 2017-2018 | 88 | 21 | 67 |
| | **மொத்தம்** | **622** | **60** | **562** |
| | நீக்கம் செய்யப்பட்டவை | **60** | | |
| | நிலுவை | **562** | | |

**இருப்பும் பொருப்பும்**

ஆண்டு இறுதியில் கொடுக்கப்பட வேண்டிய பட்டியல் தொகை ரூ.1.89 கோடி ஆகும்

**தீண்டாமை**

எல்லா ஆரம்ப பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்றும் துப்புரவு ஆய்வர்களுக்கும் தீண்டாமை ஒழிக்க தீவிர பிரசாரம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**குடும்ப நல வாழ்வு திட்டம் 2018-19**

சுகாதார பிரிவில் பணி புரிபவர்களால் குடும்ப நல வாழ்வு திட்டத்தின் தன்மையை மக்களுக்கு தகுதி வாய்ந்த தம்பதிகளுக்கும் எடுத்துரைக்கப்பட்டது. இதன்பயனாக 1870 தாய்மார்களுக்கு நகராட்சியின் சார்பில் குடும்ப நல வாழ்வு திட்டத்தின் கீழ் பி.எஸ்.அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. காப்பர் டி 380.

1920 ஆம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படியும் விதிமுறைகளின்படியும் உயர் அலுவலர்களின் அறிவுரைப்படியும் நிர்வாகம் சுமுகமாக நல்ல முறையில் நடக்க தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அலுவலர்களுக்கும், நகரமன்றத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையர்(பொ)**
**வாணியம்பாடி நகராட்சி.**

**<u>வாணியம்பாடி நகரமன்ற தீர்மானம் எண்: 31, நாள்: 31.05.2019-ன்</u>**

**<u>உண்மை நகல்</u>**

இந்நகராட்சியில் 2018-19-ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையை (Administration Report) தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:555/2019/சி1)

**தீர்மானம் எண்:** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)திரு.எஸ்.ராஜரத்தினம்**
**தனி அலுவலர்,**
**வாணியம்பாடி.**

**-/உண்மை நகல்/-**

**ஆணையாளர்(பொ)**
**வாணியம்பாடி நகராட்சி**